உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-135

விருப்ப சந்தா இதழ்



## சித்திரை மாதத்தின் சிறப்புகள்

அட்சயதிருதியை... மக்களை முட்டாளாக்கும் நகைகடைகள்

# தகுதி இல்லாதவரிடம் தானம் பெறாதீர்கள்

# வம்சம் வம்சமாக தொடரும் பித்ருக்களின் பாவம் தீர...

பிதுர் எனப்படும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தல், அவர்களால் முற்காலத்தில் ஏற்பட்ட சாபங்கள் அனைத்தும் நீங்க நரசிம்ம பூஜை உகந்தது.




தெய்வங்களை நிந்திப்பது, ஒற்றுமையாக இருந்த குடும்பங்களை கோள் சொல்லி பிரிப்பது, வாயில்லா ஜீவன் களை துன்புறுத்துவது போன்று முன்னோர்கள் செய்த பாவங்கள் தோஷங்களாக மாறி, அவர்களது வம்சாவழியினர் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

இந்த தோஷம் நீங்க எளிய பரிகாரம் லட்சுமி நரசிம்மர் படம் முன், பால் அல்லது பானகம் வைத்து காலை அல்லது மாலை வேளைகளில் நரசிம்ம ப்ரபத்தி ஸ்லோகத்தை சொல்ல வேண்டும்.

www.aanmeegamalar.com

நரசிம்ம ப்ரபத்தி ஸ்லோகம்:

மாதா ந்ருஸிம்ஹ. பித்த ந்ருஸிம்ஹ
ப்ரதா ந்ருஸிம்ஹ. ஸகா ந்ருஸிம்ஹ
விதையை ந்ருஸிம்ஹ. த்ரவிணம் ந்ருஸிம்ஹ
ஸ்வாமி ந்ருஸிம்ஹ. ஸகலம் ந்ருஸிம்ஹ
இதோ ந்ருஸிம்ஹ. பரதோ ந்ருஸிம்ஹ
யாதோ யாதோ யாஹி. ததோ ந்ருஸிம்ஹ
ந்ருஸிம்ஹ தேவாத் பாரோ நகஸ்சித்
தஸ்மான் ந்ருஸிம்ஹ சரணம் ப்ரபத்யே

இந்த மந்திரத்தை மூன்று, ஐந்து, ஒன்பது போன்ற எண்ணிக்கையில் கூறி, நரசிம்மரிடம் வைத்துள்ள பிரசாதத்தை குடும்பத்தினர் எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் பித்ருக்களால் ஏற்படும் தோஷங்கள் தீரும்.

# குணங்களுக்கு அதிபதி அம்பாள்




உயிர்களுக்கு குணத்தை அருளுபவள் அம்பிகை. ஆகவே அம்பி கையை 'குண சுந்தரி' என்று அழைப்பர். குணங்களோ மூன்றாகும். அவை"

www.aanmeegamalar.com

1. ரஜோ குணம்: உடல் வலிவு தரும்
2. சத்வ குணம்:அறிவு கூர்மை, தெளிவு தரும்
3. தாமஸ குணம்: உடலுக்கு, மனதிற்கு ஓய்வு மற்றும் அமைதி யை தரும்.

மேற்படி மூன்று குணங்களில் இறைவனின் அருள் மாறு படுமேயாயின்...

- தாமஸகுணம்: சோம்பேறித்தனத்தையும்,
- சத்வ குணம்: அறிவின்மையையும்,
- ரஜோ குணம்: பிறருக்கு துன்பம் விளைவிக்கும், ஆத்திரக்காரனாகவும் மாற்றிவிடும்.

இதுபோன்று குணங்களை மாறாமலிருக்க தொடர்ந்து அம்பாள் வழிபாடு செய்து வந்தால் குணங்கள் மாறுபாடு தடுக்கப்படும்.

# சித்திரை மாதத்தின் சிறப்புகள்

தமிழ் புத்தாண்டின் முதல் மாதமாகவருவது சித்திரை மாதம். நம்முடைய ஜோதிட முறை சூரியனை மையமாக கொண்டு கணக்கிடப் படுகிறது. அதாவது ஒவ்வொரு ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் போது ஒரு மாதம் தொடங்கும். அந்த வகையில் சூரிய பகவான் மேஷ ராசியில் சஞ்சரிக்கும் காலம் தான் சித்திரை மாதமாகும்.

சித்திரை மாத சிறப்புகள்

சித்திரை மாதம் தமிழ் மாதத்தின் முதல் மாதம். இந்த மாதத்தின் தொடக்கத்தில் சூரிய னை வழிபடக்கூடிய சிறப்புமிக்க நாளாக கொண் டாடப்படுகிறது.

சித்திரை தொடக்க நாள் வருடத்தின் தொடக்க நாள் என்பதால் அன்றைய தினம் அந்த வருடத்திற்குரிய பஞ்சாங்கத்தை வாசிப்பது அவசியம்.


வாழ்க்கையின் தத்துவத்தை உணர்த்துவது போல நம் முன்னோர்கள் இந்த தமிழ் வருட பிறப்பு நாளில் வேப்பம் பூ பச்சடி செய்வது வழக்கம். வேப்பம் பூ உடன், வெல்லம், புளி, உள் ளிட்டவை சேர்த்து செய்யப்படும் இது இனிப்பு, கசப்பு, புளிப்புடன் இருக்கும். இது வாழ்க்கை தத்துவத்தை உணர்த்தும் விதமாக இருக்கின்றது.

## சித்திரை பௌர்ணமி

இந்த மாதத்தில் வரக்கூடிய 'சித்ரா பௌர் ணமி' மிக விசேஷமானது. இந்த சித்ரா பௌர் ணமி அன்று நிலவின் முழு வெளிச்சத்தால் பூமியின் சில பகுதியில் ஒரு வகை உப்பு வெளிவரும், அது பூமி நாதம் என சித்தர்கள் அழைப்பார்கள். இது மருத்துவ துறையில் இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

## சித்திரை மாத திருவிழாக்கள்:

பெரும்பாலான சிவன் கோவில்களில் சித்திரை மாதம் உற்சவ விழா நடைபெறும். அதிலும், சித்திரை திருவிழா என்றதும் நம் நினைவுக்கு வருவது மதுரை மீனாட்சி அம்மன் சித்திரை திருவிழா. கிட்டத்தட்ட 12 நாட்கள் நடக்கக் கூடிய



www.aanmeegamalar.com

இந்த திருவிழா, மீனாட்சி அம்மனின் திருக்கல்யாணம், தேரோட்டம் உள்ளிட்டவையும், கள்ளழகர் எதிர்சேவை, வைகையாற்றில் இறங்கும் நிகழ்வும், தசாவதாரம் உள் ளிட்டவை அடங்கியது.

இந்த திருவிழாவை காண மதுரையில் லட்சக் கணக்கான மக்கள் கூடுவது வழக்கம். சைவ, வைணவ சமயத்தின் ஒற்றுமையைக் காட்டுவதாக இந்த திருவிழா அமைகிறது.




## அட்சய திருதியை

சித்திரை மாதத்தில்தான் அட்சய திருதியைநாள் வருகிறது. இது எடுக்க எடுக்க குறையாமல் பெருகும் என்ற தத்துவத்தை உள்ளடக்கியது.

இந்த அட்சய திருதியை நாளை ஒருசிலர் வியாபார நோக்கில், தங்கம் வாங்கினால் பெருகும் என்று கற்பனை குதிரையை மக்கள் மனதில் ஏற்றிவிட்டுள்ளனர், கடன் வாங்கி தங்கம் வாங்கும் அளவிற்கு நம் சமுதாய மக்கள் மனதில் இந்த நாளை தங்கம் வாங்கும் நாளாக சித்தரித்துவைத்துவிட்டனர்.

உண்மையில் இந்த நாள் பெருக்க நாள், கடன் வாங்கி தங்கம் வாங்கினாலும், சேமிப்பு காசை போட்டு தங்கம் வாங்கினாலும், கடனும் பெருகும் சேமிப்பும் கரையும்.

வேத சாஸ்திரப்படி இந்த நாளில் நாம் செய்யும் நன்மைகள் அனைத்தும் அட்சயபாத்திரத்தைப் போன்று பெருகிவரும்.

எதை செய்தாலும் பல மடங்கு பலன் பெறக் கூடிய நாளாக அட்சய திருதியை பார்க்கப் படுகிறது.

நாம் இந்த அட்சய திருதியை நாளில் செய்யக் கூடிய தான தர்மங்கள், பித்ருக்களுக்கு நாம் செய்யும் தர்ப்பணம் உள்ளிட்டவை நமக்கு பல மடங்கு பலனை தர வல்லது.

இந்த தினத்தில் அரிசி, கோதுமை, தானியங்கள். பழங்கள். தயிர், மோர், ஆடைகள் உள்ளிட்டவற்றை ஏழைகளுக்கு தானம் செய்வதால் நமக்கு மன அமைதியும், செல்வமும் பெருகும்.

அட்சயதிரிதியை வரும் பொன்னான மாத மும் சித்திரை மாதம் தான். பிரம்ம தேவர் தனது சிருஷ்டித் தொழிலை துவங்கியதும் இந்நாளில்தான்.

## சைவ வைணவர்கள் கொண்டாடும் விழா

மீனாட்சி திரு கல்யாணத் தைக் காண, அண்ணன் அழகர் சகலவிதமான ஏற் பாடுகளுடன் புறப்படுவார். தான் செல்வதற்கு முன்பே மீனாட்சி சொக்கநாதர் திருமணம் நடந்துவிட்டது என்னும் தகவல் வைகைக் கரையை அடையும்போது, அவருக்கு வந்து சேரும். கோபத்துடன் ஆற்றில் இறங்கிய அவர், அப்படியே வண்டியூர் போய்விடுவார். அழகர் ஆற்றில் இறங்குவதைக் காண வெளியூரில் இருந்து மக்கள் அலை அலையாக வருவர். இந்த நாளில் சைவர்கள் வைணவர்கள் இணைந்து வெகு விமரிசையாக கொண்டாடுவார்கள்.

நாம் செய்யும் தவறு யாருக்கும் தெரியாது என்று எண்ணிவிட வேண்டாம். எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டும் கணக்கெடுத்துக் கொண்டும் இருக்கிறான் சித்திர குப்தன் என்பார்கள். அவர் தோன்றியதும் சித்திரா பௌர்ணமியன்றுதான். அன்றைய நாளில் மக்கள் சித்திர குப்தனுக்காக விரதம் இருந்து, "எங்கள் பாவ கணக்கை குறைத்து, மேற்கொண்டு பாவம் செய்யாமல் இருக்க வழித் துணையாக இருப்பா" என வேண்டிக் கொள்வார்கள்.

சித்திரை சுக்லபட்ச அஷ்டமியில்தான் அம்பிகை அவதரித்ததாகக் கூறப்படுகிறது. இந்நாளில் அம்மனைப் போற்றி வழிபடுவதால் சிறந்த பலனையும் தெய்வ அனுகிரஹத்தையும் பெறலாம். ஆடல் அரசனைக் குளிர்விப்பதற்காக வருடத்திற்கு ஆறு அபிஷேகங்கள் மிகச் சிறப் பாக நடைபெறுகின்றன.

சித்திரை மாதத்தில் திருவோணம் நட்சத் திரத்தில் நடராஜருக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் நடப்பது வழக்கம்.



கீதா-ராஜன்

தொகுப்பு: கீதாராஜன்
தொடர்பு எண்: 9444228203

# பிரணவ மந்திரத்தை ஒலிக்கும்
# பாஞ்சஜன்யம் சங்கு

பாஞ்சசன்யம் அல்லது பாஞ்சன்னிபம் என்பது திருமாலுடைய சங்கின் பெயராகும். இந்த ஒரு சங்கில் 4 சங்கங்கள் இருக்கும். மொத்தத்தில் ஐந்து சங்குகள் இருக்கும். இந்த சங்கு வலம்புரி சங்கின் வகையைச் சார்ந்தது.

சங்கொலி என்பதே பிரணவ ஓசையை வெளிப்படுத்தும் ஒரு இயற்கை வாத்தியம். அதிலும் சுத்தமாக அட்சரம் பிசகாமல் பிரணவ மந்திரத்தை ஒலிப்பது பாஞ்சஜன்யம் சங்கு மட்டும் தான்.

இந்த பாஞ்சஜன்யம் என்ற சங்கில் இருந்து எழக்கூடிய ஓம்கார நாதமானது அட்சரம் ஒரு துளியும் பிசகாத நாத பிரம்மமானது அதன் ஒலியைக் கேட்கும் அனைவரையும் தமது மூல இயல்பான ஆத்ம நிலையுடன் ஒரு கனம் ஒன்ற வைக்கும் விதமாக அவ்வொலி இருந்தது என்பதை மகான்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஆயிரம் சிப்பிகள் சேருமிடத்தில் ஒரு இடம்புரி சங்கு கிடைக்கும். ஆயிரம் இடம்புரி சங்குகள் விளையும் இடத்தில் ஒரே ஒரு வலம்புரி சங்கு கிடைக்கும். வலம்புரி சங்குகள் ஆயிர கணக்கில் எங்கு இருக்கிறதோ அங்கே அரிதான சலஞ்சலம் என்ற சங்கு கிடைக்கும். சலஞ்சலம் சங்கு பல்லாயிர கணக்கில் உற்பத்தியாகு மிடத்தில் அரிதினும் அரிதான பாஞ்சஜன்ய சங்கு கிடைக்கும். தலைச்சங்காடு சிவத் தலத்தில் கடுந்தவம் புரிந்து திருமால் பாஞ்சசன்ய சங்கினை பெற்ற தாக தலவரலாறு கூறுகிறது.

இந்த சங்கானது உலக உயிர்களை காப்பதற்காக திருமாலுக்கு சிவபெருமான் சங்கினை வழங்கிய காரணத்தினால் இத்தல இறைவன் சங்காரண்யேஸ்வரர் சங்கவனநாதர் என்றும் அழைக்கப்பெறுகிறார்.

கிருஷ்ணன் தன் கையில் பாஞ்சஜன்யம் சங்கை வைத்திருக்கிறார். சங்கு மகாலக்ஷ்மியின் அம்சமாக உள்ளது. கிருஷ்ணர் பயன்படுத்தியது பாஞ்சஜன்யம் சங்கு அது போல் அர்ஜுனன் தேவதத்தம் சங்கையும் பீமன் மகாசங்கம் சங்கையும் தர்மர் அனந்த விஜயம் சங்கையும் நகுலன் சுகோஷம் சங்கையும் சகாதேவன் மணிபுஷ்பகம் சங்கையும் பயன்படுத்தினர்.

படத்தில் உள்ள இந்த சங்கின் நுனியிலும் அடியிலும் விளிம்பிலும் தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது. சங்கின் நுனியில் ரத்தினங்கள் கொண்டு அழகு படுத்தப்பட்டுள்ளது.

இந்த அபூர்வமான பாஞ்சஜன்ய சங்கு மைசூரில் உள்ள ஸ்ரீசாமுண்டீஸ்வரிதேவியின் ஆலயத்தில் அன்னையின் அபிஷேகத்திற்காக பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இந்த சங்கு மைசூர் சமஸ்தான மன்னர்களால் மைசூர் சாமுண்டீஸ்வரி அன்னைக்கு காணிக்கையாக வழங்கப்பட்டது.



# பிள்ளைகளின் அழிவிற்கு பெற்றோர்களே காரணமாவர்கள்

## கிருஷ்ணர் கூறிய ரகசியம்

பாண்டவர்களில் நால்வரான பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் கலியுகம் எப்படி இருக் கும் என்று தங்கள் சந்தேகத்தை கேட்டனர். அதற்கு சொல்வதென்ன எப்படி இருக்கும் என்றே காண்பிக்கிறேன் என்று கூறி நான்கு அம்புகளை நான்கு திசைகளிலும் செலுத்தினார் கிருஷ்ணர். அவற்றை கொண்டு வருமாறு நான்கு பாண்டவர்களிடமும் ஆணையிட்டார். நால்வரும் நான்கு திசைகளில் சென்றனர்.




பீமன் அம்பை எடுத்த இடத்தில் ஒரு காட்சியைக் கண்டான். அங்கு ஐந்து கிணறுகள் இருந்தன. மத்தியில் ஒரு கிணறு அதைச் சுற்றி நான்கு கிணறுகள் சுற்றியுள்ள நான்கு கிணறுகளில் சுவைமிகுந்த தண்ணீர் நிரம்பி வழிந்துகொண்டே இருந்தது. ஆனால் நடுவில் உள்ள கிணற்றில் மட்டும் நீர் வற்றி இருந்தது. இதனால் பீமன் சற்று குழம்பி அதை யோசித்தபடியே அந்த இடத்தை விட்டு கிருஷ்ணரை நோக்கி நடந்தான்.

அர்ஜுனன் அம்பை மீட்ட இடத்தில் ஒரு குயிலின் அற்புதமான பாடலை கேட்டான். பாடல் கேட்ட திசையில் திரும்பி பார்த்த அர்ஜுனன் ஒரு கோரமான காட்சியை கண்டான். அங்கு அந்த குயில் ஒரு வெண் முயலை கொத்தி தின்றுகொண்டிருந்தது.

அந்த முயலோ வலியால் துடித்துகொண்டிருந்தது. மெல் லிசை கொண்டு மனதை மயக் கும் குயிலுக்கு இவ்வளவு கொடிய மனம் உள்ளதை எண்ணி குழப்பத் தோடு அங்கிருந்து கிருஷ்ணரை நோக்கி நடந் தான்.

சகாதேவன் கிருஷ்ணரின் அம்பை எடுத்துக் கொண்டு திரும்பி வரும் வழியில் ஒரு காட்சியை கண்டான். பசு ஒன்று அழகிய கன்றுக்குட்டியை ஈன்றெடுத்தது.

ஈன்ற கன்றை தன் நாவால் வருடி சுத்தம் செய்து கொண்டிருந்தது. கன்று முழுமையாக சுத்தம் ஆகியும் தாய் பசு வருடுவதை நிறுத்தவில்லை.

சுற்றியிருந்த பலர் கன்றை பசு விடம் இருந்து மிகவும் சிரமப்பட்டு பிரித்தனர். அந்த கன்றுக்கு பலத்த காயங்கள்

உண்டானது. தாய் எப்படி பிள்ளையை காயப்படுத்த முடியும் என்ற குழப்பத் தோடு அவனும் கிருஷ்ணரை நோக்கி நடந்தான்.

நகுலன் கிருஷ்ணரின் அம்பு ஒரு பெரிய மலையின் அருகில் இருப்பதைக் கண்டு எடுதுதுக்கொண்டு திரும்பி னான். மலைமேல் இருந்து பெரிய பாறை ஒன்று கீழே உருண்டு வந்தது. வழியில் இருக்கும் அனைத்து மரங்களையும் தடைகளையும் இடித்து தள்ளி வேக மாய் உருண்டு வந்தது. வேகமாக வந்த அந்த பாறை ஒரு சிறிய செடியில் மோதி அப்படியே நின்றுவிட்டது. ஆச்சரியத்தோடு அதை கண்ட சகாதேவன் தெளிவுபெற கிருஷ்ணரை நோக்கி நடந்தான்.

நான்கு பாண்டவர்களும் கிருஷ்ணரிடம் வந்து சேர்ந்தனர். அவரவர் தாங்கள் கண்ட காட்சியையும் மனதில் உள்ள குழப்பத்தையும் கிருஷ்ணரிடம் கேட்டனர். கிருஷ்ணரோ வழக்கமான தன் மெல்லிய சிரிப்புடன் விளக்கினார்.

பீமா கலியுகத்தில் செல்வந்தர்களிடையே ஏழை களும் வாழ்வார்கள். செல்வந்தர்களோ மிகவும் செழிப்பாக வாழ்வார்கள். தம்மிடம் செல்வம் வழிந்தாலும் அதில் ஒரு சிறு பகுதியை கூட ஏழைகளுக்கு கொடுத்து உதவ மாட்டார்கள். தங்களிடம் மேலும் மேலும் செல்வம் சேரவேண்டும் என்று நினைத்து பல தவறான வழியில் செல்வதை ஈட்டி சேமித்து வைப்பார்கள். ஒரு பக்கம் செல்வந்தர்கள் நாளுக்கு நாள் செல்வதுர்கள் ஆக மற்றொரு பக்கம் ஏழைகள் ஏழைகளாகவே வருந்துவார்கள். வற்றிய கிணற்றுக்கு அருகாமையில் உள்ள நிரம்பி வழியும் கிணறுகளை போல்.



புனிதவேல்

அர்ஜுனா கலியுகத்தில் போலி மதகுருக்கள் ஆசாரியர்கள் போன்றவர்கள் இனிமையாக பேசும் இயல்பும் அகன்ற அறிவும் கொண்டவர்களாக இருப்பார்கள். இருப்பினும் இவர்கள் மக்களை ஏமாற்றி பிழைக்கும் கள்வர்களாகவே இருப்பார்கள். குயிலை போல.

சகாதேவா கலியுகத்தில் பெற் றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மீது மிகுந்த கண் மூடித்தனமான பாசத்தோடு இருப்பார்கள். பிள் ளைகளின் மீது உள்ள அளவற்ற பாசத்தால் அவர்கள் தவறு செய்தாலும் அதை பொருட்படுத்தாமல் பிள்ளைகளின் நெறி தவறிய வாழ்விற்கு தாங்களே காரணமாவார்கள். இதனால் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை துன்பப்பிடியில் சிக்கிக் கொள்ளும் என்பதை மறப்பார்கள். பிள்ளைகளும் தீயவினைகளால் துன்பம் அனுபவிப்பார்கள். பிள்ளைகளின் அழிவிற்கு பெற்றோர்களே காரணமாவார்கள் பசுவை போல்.

நகுலா கலியுகத்தில் மக்கள் சான்றோர்களுடைய நற்சொற்களைப் பேணாமல் நாளுக்கு நாள் ஒழுக்கத்தினின்றும் நற்குணத்தினின்றும் நீங்கு வார்கள். யார்நன்மைகளைஎடுத்துகூறினாலும் அதை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள். எந்தவொரு கட்டுப்பாடும் இன்றி செயல்படுவார்கள். இத்தகையவர்களை இறைவனால் மட்டுமே தடுத்துநிறுத்தி நிதானப்படுத்தி அறிவுடன் செயல்படுத்த முடியும் பாறையை தடுத்த சிறுசெடியை போல் என்று பதில் சொல்லி முடித்தார்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572






# பக்தனை காக்கும் திருமால்

# அக்பருக்கு உணர்த்திய பீர்பால்

ஒரு நாள் அக்பர் அரசவையில் அக்பரும் பீர்பாலும் பேசி கொண்டிருக்கும் போது அக்பர் பீர்பாலிடம் இந்து மதத்தில் உள்ள கடவுள் திருமால் இருக்கிறாரே அவருக்கு யாரும் சேவகர் களே கிடையாதா? என்று கேட்டார்.

அதற்கு பீர்பால் அவருக்கு ஆயிரக் கணக்கான சேவகர்கள் இருக்கிறார்கள் ஏன் கேட்கிறீர்கள்? என்றார்.

அதற்கு அக்பர் ஒரு சாதாரண யானையின் காலை ஒரு முதலை பிடித்ததற்கு உங்கள் திருமால் கருடன் மீது ஏறி சங்கு சக்கரத்துடன் வந்து அந்த யானையை காக்க வேண்டுமா? நீர் கூறியது போல் ஆயிரக்கணக்கான சேவகர்கள் இருக்கிறார்களே அவர்களில் யார வது ஒருவரை அனுப்பி அந்த யானையை காப்பாற்றியிருக்கலாமே? அதை விட்டு விட்டு அவர்



ஏன் வந்து அந்த யானையை காப்பாற்ற வேண்டும்? இதற்கு பீர்பால் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். பீர்பால் பதில் சொல்ல முடியாத அளவுக்கு நாம் கேள்வி கேட்டுவிட்டோம் என்று அக்பர் மகிழ்ந்தார். ஓரிரு நாட்கள் சென்றன.

அக்பரும் அவர் குடும்பத்தாரும் பீர்பாலும் சில மெய் காப்பாளர்களும் கங்கை கரையை கடப்பதற்கு படகில் சென்று கொண்டிருந்தனர். அக்பரின் மூன்று வயது பேர குழந்தையை கொஞ்சி கொண்டிருந்த பீர்பால் படகு ஆழமான பகுதிக்கு வந்ததும் பீர்பால் படகோட்டிக்கும் படகில் வந்த ஒரு வீரனுக்கும் சைகை காட்டி விட்டு அக்பரின் பேரனை கங்கையில் தூக்கிப் போட்டு விட்டார்.

பதறிய அக்பர் உடனே நீரில் குதித்து தன் பேரனை காப்பாற்ற துணிந்தார். அவரோடு சேர்ந்து பீர்பால் சைகை செய்த வீரனும் நீரில் குதித்து அக்பரையும் குழந்தையும் தூக்கிவந்து படகில் சேர்த்தான். படகில் பேரனுடன் ஏறிய அக்பர், பீர்பால் என்ன இது நீயா இப்படி என் பேரனை கொல்ல துணிந்தாய் என்னால் நம்ப முடிலவில்லை.




அதற்கு பீர்பால் அமைதியாக உங்களுக்கு திருமாலை பத்தி தெரிய வேண்டும் என்ற காரணத்திற்காக அப்படி செய்தேன் அரசே என்றார். அதற்கு அக்பர் நீ என் பேரனை தூக்கி தண்ணீரில் போட்டதுக்கும் உமது திருமாலை நான் தெரிந்து கொள்வதற்கும் என்ன சம்மந்தம்? என்று கத்தினார்.

அரசே என்னை மன்னித்து விடுங்கள். அன்று ஒரு நாள் திருமாலுக்கு சேவகர்களே இல்லையா அவர்தான் வந்து யானையை காப்பாற்ற வேண்டுமா என்றுகேட்டீர்கள். அரசே சிறிது யோசித்து பாருங்கள் என்னையும் சேர்த்து இந்த படகில் உங்களுக்கு 10 சேவகர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் யாருக்கும் நீங்கள் உத்தரவு பிறப்பிக்காமல் நீங்களே உங்கள் பேரனை காப்பற்ற தண்ணீரில் குதித்து விட்டீர்கள் ஏன் அரசே? உங்களை சுற்றி இருக்கும் சேவர்களான எங்களை நீங்கள் நம்பவில்லையா என்று கேட்டார்.

அதற்கு என் பேரன் மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறேன். நீ திடீரென்று தண்ணீரில் அவனை தூக்கி போட்டதால் எனக்கு அவனை காப்பற்ற வேண்டும் என்கிற எண்ணம் தான் மேலோங்கி இருந்ததே தவிர உங்களுக்கு உத்தரவிட்டு அவனை காப்பாற்ற சொல்லும் அளவுக்குஎனக்கு பொறுமை இல்லமால் நானே குதித்து அவனை காப்பாற்றினேன் என்றார்.

பீர்பால் புன்னகையுடன் அரசே இந்த நாட்டை ஆளும் உங்களுக்கே இவ் வளவு அன்பு இருக்கும் போது அண்டசாரசரங்களையும் ஆளும் எங்கள் திருமாலுக்கு எவ்வளவு அன்பு உயிர்கள்மீது இருக்கும்? அதனால்தான் எத்தனை சேவகர்கள் இருந்தாலும் தன்னை நம்பி அழைப்பவர்களை எங்கள் கடவுள் நேரில் காக்க வருகிறான். அரசேஇப்பொழுது தங்களுக்கு புரிந்ததா திருமால் ஏன் நேரில்வந்து யானையை காப்பாற்றினார் என்று? என்று புன்னகைத்தார்.

நான் நீரில் வீசிய உங்கள் பேரனை காப்பற்ற இங்குள்ள ஒரு வீரனிடமும் படகோட்டியிடமும் நான் முன்னமே சொல்லி வைத்திருந்தேன் தவறு இருந்தால் மன்னியுங்கள் அரசே என்றார். அதற்கு அக்பர் பீர்பால் நான் தான் உன்னிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். திருமாலைப்பற்றி தவறாக எண்ணியிருந்தேன்.திருமால் தாயினும் மேலானவர் என்பதை புரிந்து கொண்டேன் என்றார்.



# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**130** க்கும் மேற்பட்ட **இதழ்களை**

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**




# கோவிலுக்கு செல்வதேன்

இந்து அண்டவியல் கோட்பாட்டில் ஏழுஉலகங்கள் உள்ளதாக கூறப்படுகிறது. அந்த ஏழுஉலகத்தையும், பூமி, சுவர்க்கம், மற்றும் பாதாளம்என மூன்றாக பிரித்துவைத்துள்ளனர் நமதுமுன்னோர்.

அவ்வாறு பிரிக்கப்பட்டதில் நாம் வாழ்வது பூலோகம். இதற்கு மேலே விண்ணுலகும், கீழே பாதாள லோகமும் இருப்பதாக புராணங்கள் கூறுகிறது.

இந்த மூன்றையும் மும்மண்டலங்கள் என்றும், மூவுலகங்கள் என்றும் சிறப்பிக்கிறோம்.

முதலாவதாக பூலோகம் எனப்படும் தூல பரு உலகம் இதுவே நாம் கண்களால் காணும் உலகம்

இந்த இகலோகத்தில்தான் நாம் நமது பரு உடம்பில் அனுபவங்களைப் பெற்று, வினைகள் அகற்றி வாழ்வின் விருப்பங்களையும் கடமைகளையும் நிறைவேற்றுகிறோம்

இரண்டாவதாக உள்ளது பாதாள உலகம் இதில் நாகர்கள் வாழ்வதால் நாகலோகம் என்பர் மேலும் நாகர்களின் உறவுகளான அசுரர்கள், தானவர்கள், தைத்தியர்கள் மற்றும் இயக்கர்களும் பாதாளத்தில் வாழ்கின்றனர்

மூன்றாவது உலகமானது காரண உலகம் இதுதான் ஒளிநிறைந்த அருள் உலகமான சிவ லோகம் இதுவே மிகவும் உயர்ந்த உலகம்

இதுதான் சிவபெருமானும்சிவனுக்குஉதவி செய்யும் தெய்வங்களான விநாயகர் முருகன் போன்றோர் வாழும் இடமாகும்.


இவ்விடத்தில் ஆன்மீகத்தில் மிகவும் உயர் நிலையடைந்த ஆன்மாக்கள், தம் ஒளிமிக்க ஆன்ம உடலில் வசிக்கின்றனர். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கினால் அந்த உள்ளு லகங்களை இங்கேயே காணலாம். ஆனால் இது போன்ற நிலைக்கு அனைவராலும் செல்ல முடியாது. இதனைக் கருத்தில் கொண்டுதான் நம் கண்ணுக்கு தெரியாத காரண உலகத்தை, நமது பூமியில் பல இடங்களில் கோவிலாக உருவாக்கி அங்கு இறைவனை பிரதிஷ்டை செய்துவைத்துள்ளனர் நமது முன்னோர்.

எப்படி உயர் பதவியில் இருக்கும் நபர் வீட்டில் வசித்தாலும்கூட உரிய அலுவலகத்தில் ஒருசில நேரங்களில் சந்திக்க முடிகிறதோ, அதுபோல காரண உலகத்தில் வசிக்கும் இறைவன் ஒருசில நேரங்களில் பூமியில் அமைந்துள்ள கோவில்களில் காட்சிதந்துபக்தர்களை ஆட்கொள்வதாக ஐதீகம்.

இதனால்தான் கோவிலை சுத்தமாகவும்வைப்பதுடன், பூஜை, யாகம், கும்பாபிஷேகம் திருவிழாக்கள் போன்றவற்றை செய்து, காரண உலகத்தில் வசிக்கும் இத்தியாதி தேவதைகளை பூமியில் உள்ள கோவிலுக்கு வரவழைத்து கோவிலின் சக்தியை அதிகரிக்கும் வழிமுறைகளை செய்து வந்தனர் நமது முன்னோர் கள்.

தெய்வங்களை நாம் எவ்விடத்திலும் வணங்கலாம் என்றாலும் கோயிலில் வழிபடுவது தான் சிறந்தது ஏனெனில் மூவுலகங்களும் ஒன்றாக சந்திக்கும் சிறந்த தெய்வீக இடம் கோயில்.

வீட்டில் இறைவனை வழிபட்டாலும், முடிந்த அளவிற்கு கோவிலுக்கு சென்று இறைவனை வழிபடுவதை அவசியம் ஒவ்வொரு வரும் கடைபிடிக்க வேண்டும்.



www.aanmeegamalar.com




# திதிகளும் திதிக்குரிய பலன்களும்

திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தினைகுறிப்பதேஆகும். அமாவாசை அன்று சூரியனும், சந்திரனும் சேர்ந்து இருப்பார்கள். பவுர்ணமி அன்று சூரியனும் சந்திரனும் நேர் எதிராக 180 டிகிரி தூர அளவில் இருப்பார்கள்.

திதி என்பது சூரியனிலிருந்து சந்திரன் ஒவ்வொரு நாளும் எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளார் என்பதை பற்றி விளக்கி கூறுவதே திதியாகும். ஒருதிதிக்கு பாகையின் கணக்கானது 12 ஆகும்.

திதி என்ற சொல்லானது பிறகு தேதி என்று மாற்றம் அடைந்தது. அமாவாசை அன்று சேர்ந்திருக்கும் சூரியனும், சந்திரனும் பிரதமை திதி அன்று பிரிவடைந்து மீண்டும் சேர்ந்து இருக்கும் நிலை உருவாக 30 நாட்கள் ஆகின்றன.

இந்த 30 நாட்களுமேதிதிகளைசேர்ந்ததாகும். திதி வகைகளில் வளர்பிறை துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி போன்ற திதிகள் விசேஷமானவையாகும்.

தேய்பிறை திதிகளில் துவிதியை, திருதியை, பஞ்சமி போன்ற மூன்று திதிகளும் சுப தின திதியாகும். அந்த வகையில் இப்போது ஒவ்வொரு திதிகளிலும் எந்தெந்த சுப காரியங்களை செய்யலாம் என்று விரிவாக பார்க்கலாம்!

## பிரதமை திதி

வளர்பிறை மற்றும் தேய்பிறையில் பிரதமை திதி அன்று வாஸ்து காரியங்கள் அனைத்தும் செய்வதற்கு மற்றும் திருமண சுப காரியம் செய்ய சிறந்த திதி. அக்னி சம்மந்தமான அனைத்து செயல்களிலும்பிரதமை திதியில் பங்கேற்கலாம். மேலும் இந்த திதியில் மத சடங்குகளிலும் கலந்துக் கொள்ளலாம்.

## துவிதியை திதி

அரசு சம்மந்தமான செயல்களை இந்த துவிதியை திதியில் தொடங்கலாம். மேலும் திருமணம் போன்ற சுப காரியங்களை செய்யலாம்.

துவிதியைதிதியில் ஆடை, அணிகலன்கள் அணியலாம். ஆன்மீக ஈடுபாடான விரதங்களை மேற்கொள்ளலாம்.

இந்த திதியில் தேவதை பிரதிஷ்டை செய்யலாம். புதிதாக வீடு கட்ட தொடங்க அடிக்கல் நாட்டலாம்.

## திருதியை திதி:

இந்த திதியில், பிறந்த குழந்தைக்கு முதல் முதலாக உணவு ஊட்டி பழக்கலாம். மேலும் இந்த திதியில் இசைகள் கற்றுக்கொள்ளலாம். கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு செய்ய உகந்த திதியானது இந்த திருதியை. திதியில் சிற்பம் செதுக்கும் காரியங்களில் ஈடுபடலாம். வீட்டில் சுப காரியங்கள் செய்வதற்கு சிறந்த திதியாக விளங்குகிறது, அழகு சம்மந்தமான கலைகளில் ஈடுபடலாம்.

## சதுர்த்தி திதி

முன் காலத்தில் மன்னர்கள் அனைவரும் போர் படைகளுக்கு சிறந்த நாளாக இந்த சதுர்த்தி திதியை மன்னர்கள் தேர்ந்தெடுப்பார்கள். மேலும் இந்த சதுர்த்தி திதியில் பகைவர்களை வெல்வதற்கு, விஷ சாஸ்திரம், நெருப்பு சம்மந்தமான செயல்களை செய்வதற்கு உகந்த திதியாக இந்த சதுர்த்தி திதி விளங்குகிறது.

## பஞ்சமி திதி:

பஞ்சமி திதியில் அனைத்து சுப காரியங்களையும் தாராளமாக செய்யலாம். வளைகாப்பு செய்வதற்கு சிறந்த திதியாக பஞ்சமி திதி கூறப்படுகிறது. மருந்துகள் சாப்பிடுவதற்கு உகந்த திதி. நாக தேவதைகள் இந்த பஞ்சமி திதிக்கு அதிதேவதை ஆவார்கள். நாகர் வழிபாட்டிற்கு சிறந்த திதியாக பஞ்சமி திதியை கூறுவார்கள்.

## சஷ்டி திதி:

இந்த திதியில் சிற்ப கலை செய்வது, வாஸ்து காரியங்கள் போன்றவற்றில் கலந்துக்கொள்ளலாம். புதிதாக அணிகலன்கள் செய்யலாம், வாகனம் வாங்கலாம். புதிதாக அறிமுகம் ஆனவர்களை தமக்கு நண்பர்களாக்கிக் கொள்ளலாம். பதவி வந்தால் அதனை ஏற்றுக்கொண்டு செய்யலாம்.

## சப்தமி திதி:

வெளி பயணம் செல்வதற்கு சிறந்தது இந்த சப்தமி திதி. இந்த திதியில் புதிதாக வாகனம் போன்றவற்றை வாங்கலாம். வீடு மற்றும் தொழிலில் வாஸ்து சாஸ்திர பிரச்சனை உள்ளவர்கள் இந்த திதியில் இடமாற்றம் செய்யலாம். திருமணம் செய்வதற்கு உகந்த திதி. மேலும் சங்கீதத்திற்கு தேவையான உபகரணங்கள் வாங்கலாம். புதிதாக உடை, அணிமணிகள் நீங்களே தயாரிக்கலாம்.

## அஷ்டமி திதி:

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இந்த அஷ்டமி திதியில் தளவாடம் பொருள்கள் வாங்கலாம். நடனம் தெரியாதவர்கள் அஷ்டமி திதியில் நடன கலை கற்றுக்கொள்ளலாம்.

## நவமி திதி:

சத்ரு பயத்தினை போக்கக்கூடியது இந்த நவமி திதி. தீய செயல்களை அழிப்பதற்கு உகந்த திதி. நவமி திதிக்கு அதிதேவதை அம்பிகை.

## தசமி திதி:

தசமி திதியில் அனைத்து சுப நிகழ்ச்சிகளிலும் ஈடுபடலாம். மத சடங்குகள் போன்றவற்றை செய்யலாம். தசமி திதியில் ஆன்மீக சம்மந்தமான செயல்கள் அனைத்தையும் செய்யலாம். வெளிப்பயணம் மேற்கொள்ளலாம். மேலும் இந்த திதியில் புதிதாக வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்யலாம். வாகனம் ஓட்ட தெரியாதவர்கள் இந்த தசமி திதியில் வாகனம் ஓட்ட கற்றுக்கொள்ளலாம். அரசு சம்மந்தமான செயல்களில் பங்கேற்கலாம்.

## ஏகாதசி திதி:

விரதம் போன்றவற்றை எடுக்கலாம். சுப




காரியமான திருமணம் செய்யலாம். காயத்திற்கு சிகிச்சை பெற்று வரலாம். மேலும் இந்த திதி யில் சிற்ப காரியம், ஆன்மீக வழிபாடுகளில் பங்கேற்கலாம்.

## துவாதசி திதி:

துவாதசி திதியில் மதச்சடங்குகள் போன்ற வற்றில் கலந்துக்கொள்ளலாம். துவாதசி திதிக்கு அதிதேவதை விஷ்ணு.

## திரயோதசி திதி:

இந்த திதியில் சிவன் வழிபாடு செய்வது விசேஷம். வெளிப்பயணம் செய்யலாம். புதிய ஆடை அணியலாம். எதிர்ப்புகள் நீங்கும். ஆன்மீக வழிபாட்டில் கலந்துக்கொள்ளலாம்.

## சதுர்த்தசி திதி:

புதிதாக ஆயுதம் போன்றவற்றை செய்யலாம். சதுர்த்தசி திதியில் மந்திரம் கற்றுக்கொள்ளலாம். இந்த திதிக்கு அதிதேவதை காளி ஆவாள்.

## பௌர்ணமி திதி:

ஹோமம், சிற்ப, சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளலாம். விரதம் போன்றவை இந்த திதியில் எடுக்கலாம். பவுர்ணமி நாளிற்கு பராசக்தி அதிதேவதை.

## அமாவாசை திதி:

அமாவாசை திதியில் நம் முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய வழிபாடுகளை செய்யலாம். இல்லாதவர் களுக்கு தான தர்மம் செய்வதற்கு சிறந்த திதி. மேலும் இந்த திதியில் இயந்திர பணிகளை மேற்கொள்ளலாம்.

# தகுதி இல்லாதவரிடம்
# தானம் பெறாதீர்கள்

தான, தர்மம் என்பது தற்போது பல்வேறு இடங்களில் பல ரூபங்களில் வடிவெடுத்து வருகிறது.

உண்மையில் தற்போது தற்பெருமை, கௌரவம் போன்றவற்றை பறைசாற்றுவதாகவே உள்ளது.

உண்மையில் தானம், தர்மம் என்பது அதன் புனிதத் தன்மையை இழந்தே காணப்படுகிறது. கால சூழ்நிலை, பொருளாதாரசூழ்நிலையின்காரணமாக இதுபோன்ற தான தர்மங்களை ஒருசிலர் அவசியம் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், இதை கொடுப்பவரின் சுய ருபம் இந்த தான தர்மத்தில் பிரதிபலிக்கும்.

கொடுப்பவர் மனமும், கொடுக்கும் நோக்கமும் நல்லதாக இருந்தால் பரவாயில்லை, தற்பெருமை, கர்வம், சுயநலம் போன்றவை இருக்கும்போது அந்த தான தர்மத்தை பெறும்போது அதன் வீரியம் வாங்குபவரையும் தாக்கும் என்பது சாஸ்திரம் கூறும் உண்மையாகும்.

**10 ரூபாய் மதிப்புள்ள பொருளை தானமாக கொடுப்பதற்கு 100 ரூபாய் செலவு செய்து, நானும் தானம் கொடுக்கிறேன் என்று சுய விளம்பரம் செய்து கொள்வோர் சமுதாயத்தில் பெருகிவிட்டனர்.**

**இதுபோன்ற சுயநலவாதிகளிடமிருந்து, தானம் தர்மமாக பெறுவதை தவிர்ப்பது நல்லது.**

தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போது, பெறும் தான தர்மங்களை வீட்டில் உள்ள தெய்வ படங்களுக்கு முன்பு வைத்து இறைவனை வழிபட்டு பின் பயன்படுத்துவது சிறப்பு.

மகாபாரதத்தில் தானம், தர்மம் பற்றி பீஷ்மர் குறிப்பிடுவதை உவமையாக எடுத்துக் கொள்ளலாம்.

பிதாமகர் பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருக்கிறார். தன் உடலை விட்டுவிட வரவிருக்கிற தக்ஷிணாயன புண்ய காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார். அவரின் இறுதி ஸ்வாசத்தை நோக்கி மூச்சுவந்துபோய்க் கொண்டிருக்கும் தருணம் அவரின் விடைபெறலுக்கு முன் அவரிடமிருந்து நீதி, நேர்மை, அரசியல் தர்மம் குறித்த போதனைகளைப் பெற யுதிஷ்டிரர் விரும்பினார்.

தனது சகோதரர்கள் நால்வருடன் திரௌபதி யையும் அழைத்துக்கொண்டு பிஷ்மரிடம் சென் றார். பாண்டவர்கள் அனைவரும் பீஷ்மரை வணங்கி பிதாமகரே தாங்கள் எங்களுக்கு நீதி, நேர்மை, அரசியல் தர்மம் பற்றி உபதேசிக்க வேண்டும் என்று கேட்டார் யுதிஷ்டிரர்.

உடனே திரௌபதி பலமாக வாய்விட்டுச் சிரித்தாள். அதில் கேலியின் நெடியை உணர்ந்த யுதிஷ்டிரர் நம் தந்தைக்கு இணையான பிதா



www.aanmeegamalar.com

மகரைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய் இது தகாத செயல் என்று கடுமையாகக் கேட்டார்.

துரியோதனனின் சபையில் துச்சாதனன் என்னை மானபங்கம் செய்தபோது கண்ணனின் அன்புக்கும் கருணைக்கும் நிகரான முடிவில்லாத ஆடை மட்டும் வந்து காப்பாற்றியிருக்காவிட்டால் என் கதி என்னவாகியிருக்கும் இன்றைக்கு போதனை செய்ய இருக்கிற தர்மவானான பீஷ்மர் அந்தச் சபையில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர துரியோதனனை எதிர்த்து ஒரு வார்த்தையாவது பேசினாரா இப்படிப்பட்டவரிடம் நீங்கள் அரசியல் தர்மத்தைப் பற்றிக் கேட்கிறீர்களே என்று நினைக்கும் போது சிரிக்காமல் என்ன செய்வது என்று கூறினாள்.

யுதிஷ்டிரர் உள்ளிட்ட பாண்டவர்கள் என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியில் உறைந்தார்கள்.

பீஷ்மர் பொருள் பொதிந்த பார்வையுடனும் புன்னகையுடனும் பதில் அளித்தார்.

திரௌபதியின் சிரிப்பும் கேள்வியும் முற்றிலும் நியாயமானது. அவள் உதிர்த்த வார்த்தைகளுக்கு நான் பதில் சொல்லியே ஆக வேண்டும். அப் போதுதான் உங்களுக்கும் உலகத்துக்கும் உண்மை என்னவென்று தெரியும்.

துரியோதனன் அன்னமிடுவதில் உயர்ந்தவன். எந்த நேரத்தில் யார் வந்தாலும் அவர்கள் வயிறு நிறையும்படி உபசரிப்பான். ஆனால் அவன் செய்யும் அன்னதானம் பரிசுத்தமான மனதுடன் செய்யப்பட்டதல்ல. சுயநலத்துக்காக அன்னதானம் என்ற பெயரில் உணவிட்டு அவர்களைத் தன் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வான்.

உண்டவர்களும் செஞ்சோற்றுக் கடன்தீர்க்க வேறு வழியில்லாமல் அவன் சொல்படி நடப்பார்கள். இதற்கு சல்லியனும் கர்ணனும் உதாரணங்கள்.

**ஒருவன் தூய்மையான மனமில்லாமல் வஞ்சக எண்ணத்துடன் மற்றவர்களுக்கு அன்னமிட்டால் அந்த எண்ணம் உண்டவனின் ரத்தத்தில் கலந்து விடும். நான் துரியோதனன் இட்ட சோற்றை உண்டதால் எனக்குள் அவனது தீய குணமே குடிகொண்டு விட்டது. அதனால்தான் திரௌபதியை மானபங்கம் செய்தபோதும் எதுவும் பேச முடியாமல் வாயடைத்து அமர்ந்திருந்தேன்.**

ஆனால் இப்போது அர்ஜுனன் கொடுத்த அம்புப்படுக்கையில் படுத்த பிறகு எனது உடலிலிருந்த தீய எண்ணங்களுடன் கலந்திருந்த ரத்தம் முழுவதும் வெளியேறி விட்டது. அத்தோடு தீய சக்திகளும் வெளியேறிவிட்டன.

இப்போது என் உடலில் தூய்மையான ஆன்மா மட்டும்தான் இருக்கிறது. எனவே நான் அரசியல் தர்மத்தைப் பற்றிப் பேசத் தகுதியுள்ளவனாக என்னைக் கருதுகிறேன். என்று சொல்லி பாண்டவர்களுக்கு அரசியல் தர்மத்தை உபதேசம் செய்தார்.

கீதையில் பீஷ்மர் உபதேசித்த இந்த அரசியல் தர்மம் தற்போதைய காலகட்டத்தில் மிக அவசியம் அனைவராலும் கடைபிடிக்கவேண்டிய ஒன்றாக இருந்தாலும், தானம் தர்மம் பெறும்போது சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நன்மை தரும்.



# காலநடைகள் வாழ்க சிவபெருமானிடம் உத்தரவு கேட்கும் விவசாயிகள்

எண்ணற்ற திருநாமங்களுடைய சிவ பெருமானுக்கு சோமேஸ்வரர், சோமநாதேஸ்வரர் என்ற திருநாமங்கள் உண்டு.சோமநாதேஸ்வரர் என்ற திருநாமம் கொண்டு இறைவி மங்களாம்பிகை உடன் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே புஞ்சைத்துறையாம்பாளையம் என்ற திருத்தலத்தில் எழுந்தருள்கிறார்.

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் சத்திய மங்கலம், கோபிசெட்டிபாளையம், குன்னத்தூர், குருமந்தூர் அடங்கிய நிலப்பகுதிகளை திப்புசுல்தான் படையெடுப்பிற்கு முன் தனது அதிகாரத்தின் கீழ் அரசாட்சி செய்து வந்த பாண்டிய அரசன் ஒருவர் புஞ்சைத்துறையாம்பாளையம் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது, குதிரை ஒரு இடத்தில் நின்று விட்டது. சேனைகளோடு வந்து கொண்டிருந்த அரசன் முரண்டு பிடித்த குதிரை மேற்கொண்டு செல்லாமல் இருப்பதைக்கண்டு வியப்புற்று குதிரை மீதிருந்து கீழே இறங்கி தனது படைத் தளபதியை அழைத்துக் காரணம் கேட்டான். உடனே படைத் தளபதி சற்று நேரம் அருகிலிருந்த செடி, புதர்கள்நிறைந்த பகுதிக்குள் சென்று பார்த்துவிட்டு வந்து மன்னரிடம் இங்கு நந்தியெம் பெருமான் சிலைகளும், சிவலிங்கம் மற்றும் வேறு சில தெய்வங்களின் சிலைகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளது என்று கூறியுள்ளார்.

தீவிர சிவபக்தரான பாண்டிய அரசன்அந்த இடத்தில் உள்ள செடி,கொடிகளுடன் உள்ள புதர்களை அகற்றித் தூய்மைப்படுத்திட ஆணையிட்டார். பிறகு இந்த இடத்தில் அற்புதமான சிவாலயத்தை ஏற்படுத்தினார். இறைவனை சோமநாதேஸ்வரர் என்றும், இறைவிக்கு மங்களாம்பிகை என்றும் திருநாமம் சூட்டி அழைத்ததாக தல வரலாறு மூலம் தெரிய வருகிறது. அக்காலத்தில் மிகவும் சிறப்பான வழிபாடுகள் இந்த ஆலயத்தில் நடைபெற்றுவந்துள்ளது.காலப்போக்கில் அந்நியர் படையெடுப்பிற்கு பின்னர் சரியான கவனிப்பின்றி ஆலயம் மிகவும் சிதைந்து போனது. ஆலயம் சிதிலமடைந்த பின்னர்




www.aanmeegamalar.com







வருடத்திற்கு ஒருமுறை கனுமாட்டுப் பொங்கல் நாளில் மட்டுமே இந்த ஆலயத்தில் பக்தர்கள் கூடி, இந்த ஊரில் உள்ள சிறுவர் சிறுமியரைக் கொண்டு "பூப்பறிக்கும் விழா" நடத்தியுள்ளனர். அதற்குக் காரணம் இக்கோயிலில் காணப்பட்ட ஒரு கல்வெட்டில் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி மன்னர் காலத்திலேயே நடைபெற்றிருந்ததாக குறிப்பொன்று காணப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

சிதிலமடைந்திருந்த கோயிலை 2004 ஆம் ஆண்டு தூய்மைப்படுத்தி பச்சைப் பந்தல் போட்டு மாத பிரதோஷ வழிபாட்டை சிறப்பாக செய்து வந்துள்ளனர். பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொண்டவர்கள் வாழ்வில் ஏற்றம் பெற இறைவனுக்கும், இறைவிக்கும் தனித்தனி மூலஸ்தானத்துடன் புதிய ஆலயத்தை எழுப்பி 2008 ஆம் ஆண்டு கும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடத்தியுள்ளனர்.

ஆலயத்தில் நுழையும் போது தனது இரு பக்கமும் நாகருடன் ஜல விநாயகர் தரிசனம் கிடைக்கின்றது. அதனையடுத்து சென்றால் இறைவன் குடிகொண்டுள்ள கிழக்கு நோக்கிய ஆலயத்தின் எதிரே கொடிமரம்,பலிபீடம் அதனையடுத்து பிரதோஷ நந்தியாக மஹா நந்தியெம்பெருமான் வீற்றிருக்கிறார்.அர்த்த மண்டபத்தில் அதிகார நந்தியெம்பெருமான், விநாயகர், முருகப்பெருமான் தரிசனம் கிடைக்கின்றது.

கருவறையில் சிவலிங்க வடிவினராக எழுந்தருளியுள்ளார் சோமநாதேஸ்வரர். ஒளி வீசும் பாணமும்,அழகிய ஆவுடையும் கொண்ட அற்புத திருமேனியராக அருள்பாலிக்கிறார்.சோமம் என்றால் சந்திரன்.திங்கள் என்றாலும்சந்திரனைக் குறிக்கும். சந்திரனை பிறையாக்கி தன் சிரசிலேயே வைத்து அணிந்து கொண்டிருப்பதால் இந்த திருநாமத்திற் குரியவரானார்.

கோஷ்டத்தில் நிர்த்த கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர்,பிரம்மா, விஷ்ணு துர்க்கை ஆகிய தெய்வங்களின் தரிசனம் கிடைக்கின்றது. இறைவன் சந்நிதியின் இடப்பாகத்தில் இறைவி சந்நிதி தனி மூலஸ்தானத்துடன் உள்ளது. அம்பிகை சந்நிதியின் எதிரே நந்தியெம்பெருமான் வீற்றிருக்கிறார்.

அர்த்தமண்டபத்தைக் கடந்து கருவறையை நோக்கினால் இறைவி மங்களாம்பிகை நின்ற நிலையில் அற்புத ஆற்றல் நிறைந்து அருள்மழை பொழியும் பேரழகியாக அருள் பாலிக்கின்றாள்.

வெளிச்சுற்றில் சந்திரன்,சூரியன், பழமையான நந்திகள், திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர், மகா கணபதி, பக்த ஆஞ்சநேயர், சண்டிகேஸ்வரர், ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹா விஷ்ணு, வள்ளி தெய்வானை சமேத கல்யாண சுப்பிரமணிய சுவாமி, சனீஸ்வரர் மற்றும் நவகிரகங்கள் ஆகிய தெய்வங்களின் தரிசனம் கிடைக்கின்றது.

இத்தலத்தில் சைவமும், வைணவமும்இணைந்து விளங்குவது இத்தலத்திற்கு மேலும் சிறப்பு சேர்க் கிறது. கார்த்திகை மாதம் ஐந்து திங்கட் கிழமை சோமவார பூஜை சிறப்பாக செய்யப்படுகிறது. இதனை யொட்டி மாலை திருவிளக்கு பூஜை நடைபெறு கின்றது.


செ.சு.சரவணகுமார்

மார்கழி மாதம் அனைத்து தெய்வங்களுக்கும் விசேஷ வழிபாடு செய்யப்படுகிறது.தைப்பூசம்,பங்குனி உத்திரம் ஆகிய வருட முக்கிய விரத தினங்களில் மாலை சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது.

இப்பகுதி விவசாயிகள் கால் நடைகள் வாங்குவதாக இருந்தால்




பிரதோஷ நாளில் மாலை இத்தலத்தில் பூவரம் கேட்டு வாங்குவதாக கூறுகின்றனர்.

இறைவன் உத்தரவுப்படி கால்நடைகள் வாங்குவதால் ஆநிரை கள் பெருகுவது உறுதி என சொல்கின்றனர்.

இறைவனுக்கு சோமவார நாளிலும்,இறைவிக்கு வெள்ளிக்கிழமை மற்றும் அமாவாசை நாளிலும் சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது.

சங்கடஹரசதுர்த்தியில் விநாயகப்பெருமானுக்கும், பிரதோஷ நாளில் நந்தியெம் பெருமானுக்கும் எம்பெருமானுக்கும், பௌர்ணமி நாளில் சத்திய நாராயணா பூஜை ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹாவிஷ்ணுவுக்கும், சஷ்டி, கிருத்திகை நாளில் வள்ளி தெய்வானை சமேத கல்யாண சுப்பிரமணிய சுவாமிக்கும்,தேய்பிறை அஷ்டமி நாளில் பைரவர் மூல மந்திர ஹோமத்துடன் காலபைரவருக்கும் விமரிசையாக வழிபாடுகள் நடைபெறுகிறது.

சனிப்பிரதோஷ நாளில் 108 வலம்புரி சங்காபிஷேகம் நடைபெறுகிறது.இந்தப் பூஜையில் பங்கேற்றால் வாழ்வில் தடைபட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறுவதாக கூறுகின்றனர்.

கார்த்திகை மாதம் தேவாஷ்டமிநாளில் காலபைரவருக்கு சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமி நாளிலும் இத்தலத்தில் பைரவர் மூல மந்திர ஹோமத்துடன் கால பைரவருக்கு விசேஷ அபிஷேக பூஜைகள் நடைபெறுகிறது.

தேய்பிறை அஷ்டமி நாளில் நடைபெறும் பைரவர் மூல மந்திர ஹோமத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு திருஷ்டி உபாதைகள்,சத்ரு உபாதைகள் நீங்கி வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

திரயோதசி, சதுர்த்தசி ஆகிய இரண்டு திதிகளுமே விசேஷமானவை. திரயோதசி, அன்னை பார்வதியின் வடிவம். சதுர்த்தசி, சிவபெருமானின் வடிவம் என்கின்றன புராணங்கள். மகாபிரளய காலத்துக்குப் பின் சிவபெருமானுள் அன்னை உமாதேவி ஒடுங்கி நின்ற தினமே மகாசிவராத்திரி. அன்னை, இந்தப் பிரபஞ்சத்தின் சக்தி. ஐயன், இந்தப் பிரபஞ்சப் பெருவெளி. இரண்டும் இணைந்து அருளிய தினம் என்பதே சிவராத்திரியின் பொருள்.

சிவமும் சக்தியும் இணைந்து அருளும் தினம் என்பதாலேயே, இந்த தினம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்த நாளில் வழிபடுவதன்மூலம் வேண்டும் வரங்களைப் பெற முடியும். இத்தலத்தில் மகா சிவராத்திரி நாளில் நான்கு கால பூஜை விமரிசையாக நடைபெறுகின்றன.

சித்ரா பௌர்ணமி நாளில் திருவிளக்கு பூஜை, ஆடி வெள்ளிக்கிழமை நாளில் திருவிளக்கு பூஜை,புரட்டாசி மாதம் ஐந்து சனிக்கிழமை நாளும் பெருமாளுக்கும்,பக்த ஆஞ்சநேயருக்கும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. குருபெயர்ச்சி விழா நாளில் தென்திசை கடவுளாம் தட்சிணா மூர்த்தி குருபகவானுக்கு குருபகவான் மூல மந்திர காயத்திரி ஹோமமும், கும்ப பூஜை அபிஷேகம், அலங்காரம்,சிறப்பு அர்ச்சனை என வழிபாடு விமரிசையாக செய்யப்படுகிறது. 'சிவாயநம' என்று சிந்திப்போர்க்கு அபாயம் ஒரு போதும் இல்லை என்பது நிச்சயம்.

திருக்கோயில் அமைவிடம்:

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்திலிருந்து பங்களாப்புதூர் வழியாக அத்தாணி செல்லும் வழியில் இந்திராநகர் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சற்று நடந்தால் இத்தலத்தை அடையலாம்.

– சென்னி வீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883

## ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்–ஆப்,
இ–புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

**இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.**

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# அறக்கருணை மறகருணை வடிவில் அன்னையை வழிபடும் பக்தர்கள்

அன்னை அகிலாண்டேஷ்வரி சிவபெருமானுக்கு நாயகி என்பதனால் சிவனை வணங்கும் சிவனடியார்களை தன்னை வணங்கவும் வைக்கிறாள். பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனின் தங்கை என்பதனால் ஸ்ரீ வைஷ்ணவனையும் வணங்க செய்கிறாள்.

பிரணவப் பொருளான கணபதிக்கு தாய் என்பதாலும், நக்கீரரை திருமுருகாற்றுப்படை பாட வைத்த ஞானபண்டிதனுக்கு தாய் என்பதாலும், முருக பக்தர்களும், விநாயக அடியார்களும் அவளை அன்போடு வணங்குகிறார்கள்.

சிவபெருமானுக்கும், திருமாலுக்கும், இல்லாத முக்கியத்துவம் பாரத திருநாட்டில் பராசக்திக்கே கொடுக்கப்படுகிறது என்றால் அது மிகையில்லை காரணம் வடக்கு எல்லையான காஷ்மீரத்தில் அன்னை சஷிரபவானி என்ற திருநாமத்தோடு எழுந்து நிற்கிறாள், குஜராத்தில் அம்பாஜி, ஆகவும், உத்திரப்பிரதேசத்தில் விந்தியவாஷினியாகவும், வங்காளத்தில் காளியாகவும் வனம் சூழ்ந்த அஸ்ஷா மில், காமரூபினியாகவும், கன்னட தேசத்தில் சாமுண்டிஸ்வரியாகவும், பரசுராமர் பூமியான கேரளத்தில் பகவதியாகவும், தமிழ் கூறும் நல்லுலகில் காமாட்சி, மீனாட்சி,சிவகாமி, விசாலாட்சி, அபிராமி என்ற பல திருநாமங்களோடு முக்கடலும் சங்கமிக்கும் நாட்டின் தெற்கு எல்லையில் ஈசனை வரவேற்க தவக்கோலத்தில் கன்னியாகுமாரியாக எழுந்தருளி நிற்கிறாள் உலகம் படைத்த அன்னை பிரிந்த கிடந்த சமயங்களை

கடவுள் உருவாக்கிய மதம்






மட்டும் ஒருங்கிணைக்கவில்லைபல மொழியாக, பல இனமாக, பல பண் பாட்டுக்களாக பிரிந்து கிடந்த இந்திய தேசத்தையும் இது ஒரே நாடு, ஒரே பூமி என ஒன்று சேர்க் கிறாள்.

அன்பின் உருவான அன்னையை ஆற்றலும் ஆவேசமும் ஒருங்கேகொண்ட மறக்கருணை நெறியில் வழிபடு வோரும் உண்டு. காலகாலத்தையும் கடந்து நிற்கும் இறை வனான சிவபெருமானை தனது ஆவேசத்தின் முன்னால் சவம் போல தரையில் தள்ளி மார்பில் ஏறி நின்று ரௌத்திர தாண்டவம் ஆடும் அன்னையின் ஆவேசக் கோலத்தை காளி தேவியாக பாரதத்தின் வடதிசை மக்கள் பக்தி சிரத்தையுடன் வழிபடுகிறார்கள்

பசித்த குழந்தைக்கு பாலூட்ட ஒடோடிவரும் பரம தயாள வடிவாக அழகே வடிவான காமாட்சி யின் சௌந்தர்ய வடிவாகவும் தென்பகுதி மக்களால் போற்றி வணங்கப்படுகிறாள்அதனால் தான் அம்மையின் அருட்தலங்கள் என்று அழைக்கப்படும் சக்தி பீடங்கள் நாடு முழுவதும் நிறைந்துள்ளன.

சாஸ்திரப்படி 64 சக்தி பீடங்கள் என சொல்லப் பட்டாலும் தந்திர சூடாமணி, குப்ஜிகாதந்திரம், ஸ்கந்த புராணம், தேவி பாகவதம்போன்ற நூல்கள் அன்னையின் அருள்ளாட்சி நடக்கும் சக்தி பீடங்களின்எண்ணிக் கையை சில இடத்தில் கூட்டியும், சில இடத்தில் குறைத்தும் நமக்கு காட்டுகின்றன ஏது எப்படியோ நம் நாட்டை பொருத்தவரை வேலி ஒரமாக இருக்கும் பாம்பு புற்றிற்கு சிவப்பு பாவாடை கட்டி மஞ் சளை தெளித்து வழிபட்டாலே அங்கே அன்னை வந்து அரு ளாட்சி நடத்தி அற்புதம் செய்ய ஆரம்பித்துவிடுவாள்.




நாட்டு மக்கள் அனைவ ராலும் பேதங்களை மறந்து ஒரு மனதோடு வழிப்படும் உன்னத நிலையில் சக்தி மார்க்கம் என்ற சாக்த மதம் திகழ்ந்தாலும் அதன் பண்பாடும் தத்துவ ஞான மரபும் பழமை வாய்ந்ததாகவும், செழுமை வாய்ந்ததாகவும் இருந்தாலும் கூட அந்த நெறியை முழுமையாக தொகுத்து விளக்கமாக விரிவுரை செய்து மக்கள் பயன்படும் வண்ணம் எந்த முயற்ச்சியும் தொல்பழங்காலத்தில் எடுக்கப்படவில்லை

அதுமட்டும்மல்ல சக்தி தத்துவம் இந்திய தத்துவ ஞான சாஸ்திரங்களில் ஒன்றாக கருதப்படவும் இல்லை இந்திய ஞானிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தவரான ஸ்ரீ மத்துவர் எழுதிய சர்வ தரிசன சங்கீரக நூலிலும் இது இணைக்கப்படவில்லை இதற்கு என்ன காரணம் என்று மிக ஆழமாக சிந்தனை செய்தோம் என்றால் சிற்சில விசயங்கள் நம் கண்களில் படுகிறது

சக்தி சாஸ்திரத்திலும் சாதனா மார்க்கங்களிலும் சொல்லப்பட்டிருப்பவைகள் சாதாரண மக்களால் சுலபமாக தொட்டு பார்க்க முடியாது அதி சூட்சுமங்களாகும் இப்படி அனுபவ நிலைக்கு விரைவில் பொருந்தி வர முடியாது எவைகளையும் தத்துவ ஞானிகள் தங்களது வாத பொருளாக எடுத்துக் கொள்வதுயில்லை அதுமட்டும்மல்ல சக்தி தத்துவத்திற்கும், சிவ தத்துவத்திற்கும் பெரியளவில் வித்தியாசம் கிடையாது. அதனாலும் ஞானிகள் இதை முழுமையாக தொகுக்காமல் விட்டிருக்கலாம்.

இப்படி நாம் சொல்லும் இரண்டு காரணங்களில் எதையாவதுஒன்றை ஏற்றாலும் அல்லது இரண்டுமே சரியானது தான் என ஒப்புக் கொண்டாலும் நிச்சயம் அது நியாயமாக இருக்காது.

காரணம் உபநிஷதங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு மெய்ப்பொருளியல் கருத் துகளை தொகுத்தால் சக்தி ஆகமக் கருத்துகளையும் நிச்சயம் கைநழுவ விடாமல் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நடைபெற்றதாக தெரியவில்லை. எனவே இவை இரண்டையும் தாண்டிய ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். அது இன்னதென்று நம்மால் அடையாளம் காண முடிய வில்லை என்றாலும் வருங்கால

ஆய்வுகள் அதை தெளிவுபடுத்தும்.

இதனால் புராதான காலத்து ஆதார நூல்கள் எதுவும் நமக்கு கிடைக்க வில்லை என்றாலும் இடைக்காலத்தை சேர்ந்த நம்ப தகுந்த பல நூல்கள் நமக்கு கிடைக்கின்றன. இவற்றை சற்று மேலோட்டமாக படித்தாலே மிகப் பழைய கால நூல்கள் நிறைய இருந்திருக்கின்றன. அவைகள் கால வெள்ளத்தில் மறைந்து போய்விட்டன என்பது நமக்கு நன்கு விளங்குகிறது. தாந்திரிக கலை வளர்ச்சியடைந்து மக்களிடம் செல்வாக்கு பெற்ற பிறகு வடமொழி இலக்கியத்தில் சக்தி தத்துவம் தனியரசு செலுத்த துவங்கியது எனலாம். சாக்த நெறியை விளக்குவதற்காகவே பல ஆகமங்கள் புதியதாக தோன்றின.

பொதுவாக எல்லா ஆகமங்களும் கடவுளும் ஜீவனும் வேறுவேறானது அல்ல இரண்டுமே ஒன்றானதுதான் என எடுத்துக்காட்டும் அத் வைத கொள்கையை முக்கிய நோக்கமாக கொண் டவைகள் தான் ஆனாலும் கூட வேறு சில கருத்து களையும் ஆகமங்கள் பிரதாண பாதையாக கருது கின்றன சிவபெருமானது யோகமுகத்திலிருந்து 64 பைரவ ஆகமங்கள் தோன்றியதாக நம்பப்படுகிறது.

அதில் பத்து ஆகமங்கள் சைவாகமங்கள் என்ற பெயரில் துவைத கொள்கையை தனக்குள் கொண்டுள்ளன 18வித ருத்ராகமங்கள் என்று சொல்லப்படுபவைகள் அத்வைதத்தையும், துவை தத்தையும் தனக்குள் கொண்டுள்ளன.

இத்தகைய ருத்ராகமங்கள் சாக்த நெறியையும் பேசுகிறது. அவற்றில் குறிப்பாக சுவஸ்சந்தா, மாலினி விஜயம், விஞ்ஞான பைரவம், திரிசிரோபைரவம், குளகாவரம், பர மானந்த தந்திரம் என்பவைகள் சக்தி தத்துவத்தை அணு அணுவாக நமக்கு விளக்குகின்றன.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இந்து சமயத்தில் மிக முக்கிய மத பிரிவான ஸ்ரீ வைஸ்ணவத்தில் வடகலை, தென்கலை என இரண்டு உட்பிரிவுகள் இருப்பதை போலவே சாக்தத்தில் ஸ்ரீ வித்யா, ஸ்ரீ காளி, என இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. இதில் ஸ்ரீ வித்யா மரபுக்கே மிக சிறந்த பரந்து விரிந்த இலக்கியங்கள் இருக்கின்றன. அகஸ்தியரும், துர்வாசகரும், தத்தாதிரேயரும் ஸ்ரீ வித்யாவின் இடத்தில் தீவிர அன்பு கொண்டு சுவை மிகுந்த பல நூல்களை எழுதியுள்ளன.சக்தி சூத்திரம், சக்தி மகிமாஸ் ஸ்தோத்திரம் என்ப வைகள் அகத்தியரால் உருவாக்கப்பட்டசிறப் படைய படைப்பாகும். இவற்றில் பிரம்மசூத்தி ரம் சிவ சூத்திரங்களை போல் தத்துவகருத்துக்கள் கொட்டிக்கிடைக்கவில்லை என்றாலும் அன்புமய மாக பக்திரசம் ஏராளமாக ஊற்றெடுக்கிறது.

புராணங்களின் கருத்துப்படி துர்வாசக மகரிஷியை ஆகமங்களை உருவாக்கி உலகெல்லாம் பரப்புமாறு சிவபெருமான் கட்டளையிடுகிறார். துர்வாசகர் தனது தவபலத்தால் மூன்று ரிஷிகளை உருவாக்கி அவர்களுக்கு எல்லாவிதமான தத்துவ ஞானங்களை போதித்து நாடு முழுவதும் திருமடங்களை உருவாக்க உத்தரவு இடுகிறார். அது மட்டுமல்லாது சிவபெருமானை குறித்து பரசம்பு ஸ்தோத்திரம் என்ற நூலையும், சக்தியை வழிபட லலிதா தவரத்தினம் என்ற நூலையும் எழுதியுள்ளார். அவைகள் இன்றளவும் நிலைத்து

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

நின்று சக்தி தத்துவத்தின் சிறப்புகளை நமக்கு எடுத்து சொல்கின்றன. இதே போல தத்தாத்ரேயர் தத்த சம்ஹித என்ற அற்புதமான நூலை படைத்துள்ளார். இது மிகப்பெரிய நூல் படித்து மனப்பாடம் செய்வது என்பது அக்கால குருகுல மாணவர்களாலேயே முடியாமல் இருந்தது.அதனால் இதை எளிமைப்படுத்த ஆறாயிரம் ஸ்லோகங்கள் உள்ள நூலாக பரசுராமன் தொகுத்து வைத்துள்ளார்.

இதே நூலை மூல குருவான தத்தாத்ரேயருக்கும் எளிய உரை தந்த பரசுராமருக்கு நடக்கும் உரை யாடலாக மீண்டும் எளிமைப்படுத்தி ஆயிரம் ஸ்லோகங்கள் கொண்ட நூலாக வடிவமைத்து உள்ளார். பரசுராமரின் நேரடி சீடரான ஸ்மேதா மகரிஷி என்பவர். இது தவிர இந்த மகரிஷி திரிபுரா ரகசியம் என்ற ஒரு நூலையும் எழுதி உள்ளார். இந்த நூலில் உள்ள ஞானகாண்டம் பகுதி இன்று வரையிலும் சாக்த மெய்பொருளியலுக்கு சிறந்த முன்னுரையாக அமைந்துள்ளது. ஆதிசங்கரரின் குருவுக்கும் குருவான ஸ்ரீகௌட பாதர் ஸ்ரீ வித்யா ரத்ன சூத்திரகம் என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். இதற்கு சங்காரான்யன் என்பவர் விரிவுரை எழுதி யுள்ளார். சாக்த இலக்கிய வரலாற்றில் இது ஒரு முக்கிய நூலாகும். கௌடபாதர் ஆதி சங்கரின் பரம குருவாச்சே அதனால் இந்நூலில் ஏராளதத்துவ கருத்துக்கள் கொட்டி கிடக்கும் என்று ஆர்வத்துடன் உள் நுழைந்தால் நமக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது.

சக்தி வழிபாட்டு இலக்கணம் பேசப்படும் அள விற்கு தத்துவங்கள் பேசப்பட வில்லை இருப்பினும் சாக்த மதத்தினர் சங்கரரின் சௌந்தர்ய லகரி என்ற நூலுக்கு கொடுக்கும் மரியாதை ஸ்ரீ வித்யா ரத்ன சூத்திரத்திற்கும் கொடுக்கிறார்கள். ஆதிசங்கரர் சீடர் ஸ்ரீ பத்ம பாதர் விளக்க உரையுடன் பிரபஞ் சசாரம் என்ற நூலையும், பிரயோக கிரம திபீகை என்ற நூலையும் எழுதியுள்ளார். இது தவிர லஷ்மண தேசிகர் எழுதிய சாரதா திலகம், சோட மாந்தர் எழுதிய சிவதிருஷ்டி என்ற நூலும் குறிப்பிடதக்கதாகும்.

இதை எல்லாவற்றையும் விட அபிநவ குப்தர் என்பவரே சாக்த மதத்திற்கு தத்துவ ரீதியான அஸ்திவாரத்தை கொடுத்தார். இவர் சங்கரரை போலவே மிகச் சிறந்த தத்துவ ஞானி வாத வல்லுநராவார். சைவ சமய, சாக்த சமய ஆகமங் களை தவிர இவருடைய நூல்கள் எல்லாம் அழகான கவிதைகள் மட்டுமல்ல நாடக பாணியில் தத்துவ கருவூலங்களை எடுத்து இயம்புகின்றன. இவருக்கு இணையாக சாக்த தத்துவத்தை சொன்னவர்கள் யாருமே இல்லையென துணிந்து சொல்லலாம். தந்திரலோகம் மாலினி விஜய வார்த்திகம், பரதிரியம் சிகா, விவர்ணம்பிரத்ய பிஞ் சா விமர்சினி, பிரத்ய பிஞ்சா விருத்திவிமர்சினி ஆகிய நூல்கள் அசாதாரணமான விதத்தில் சமய ஞானத்தை, நமக்கு படம்பிடித்து காட்டுகிறது.

அபினவ குப்தருக்கு பின், கோரக்கர் புண்ணி யாந்தர், நடனானந்தர், அமிர்தானந்தர் பாஸ்கரர் ராயர் போன்றோர்களும் அற்புதமான படைப்புகளை சாக்த மதத்திற்கு வழங்கி உள்ளனர். கோரக்கர், மாகத்த மஞ்சரி என்ற நூலுக்கு ஆசிரியராவார். அவரே அதற்கு பரிமளம், சம்வித் உல்லாசம் ஆகிய இரண்டு விரிவுரைகளை செய்துள்ளார்.

பாஸ்கரராயர் எழுதிய சக்தி சூத்திரம் என்ற நூலுக்கு பிரத்ய பிஞ்சா ஹிருதலம் என்ற விளக்க உரையை சோமராஜர் என்பவர் எழுதியுள்ளார். புண்ணியானந்தர், காமகலை விலாசம் என்ற தமது புகழ்பெற்ற நூலில் சக்தியின் படைப்ப தத்துவத்தை விரிவாக கூறுகிறார். சுமதந்திரானந்தர் எழுதிய சக்கர விவேகம் என்ற நூல் ஐந்து பிரிவுகள் உடையது. இது சக்தி தந்திரங்களின் ரகசிய ஞானம் ரகசியமான ஆகமங்களின் விரிந்த விளக்கத்தையும், தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் சேது பந்தம் கல்ப லதா, வாரிவாசிய ரகசியம் வாரிவாசிய பிரகாசம், கௌலதிரிபுரா, பாபனா உபநிசதம், லலிதா சகஸ்ரநாமம் என்ற சௌபாக்கிய பாஸ்கரும், துர்கா சம்தசதி போன்ற நூல்களும் ஸ்ரீ வித்யா பிரிவின் தத்துவங்களை நமக்கு விரிவாக விளக்குகின்றனர்.

சாக்த மத பிரிவில், ஸ்ரீ காளி என்ற உட்பிரிவுக்கு இந்தளவு இலக்கிய செல்வங்கள் இல்லை யென்றாலும் கால ஞானம், காலோத்தரம் பாகா கால சங்ஷீதா, வியோககேசங்ஷீதா ஜெயதிரதாயாமலை, உத்திர தந்திரம், சக்திசங்காமா தந்திரம் என்ற நூல்கள் முக்கியமானதாக கருதப்படுகிறது.

ஸ்ரீ வித்யா பிரிவு என்றாலும், காளி ஸ்ரீ பிரிவு என்றாலும் இரண்டுமே உலக அன்னையை தான் பரம பிரம்மமாக கொள்ளுகின்றன. இதில் ஸ்ரீ வித்யா அன்னையை அறக்கருணை வடிவிலும் ஸ்ரீ காளி பிரிவு மறகருணை வடிவிலும் வழிபடுகிறது என சொல்லலாம். இவைகளுக்குள் பெரிய வித்தியாசங்கள் அதிகமாக கிடையாது. இனி நாம் சாக்த மதத்தின் முக்கியமான தத்துவங்களையும் அந்த மதத்திலுள்ள சிறப்பு மிக்க ஸ்ரீசக்ர வழிபாட்டின் ரகசியங்களையும் ஓரளவு எளிமையாக ஆராய்வோம்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும் **போன்: 09442426434**

# அஷ்டதிக் பாலகர்கள்

படைக்கும் தொழிலை செய்யும் பிரம்மா படைக்கும் தொழிலை செய்வதோடு மட்டும் நின்று விடாமல் நாம் செய்யும் புண்ணிய செயல்களையும் – பாவ செயல்களையும் கண்காணிப்பதற்கு ஒரு படையே வைத்திருக்கின்றார் என்பதை நாம் நினைவில் கொண்டு செயல்படவேண்டும்.

நாம் செய்யும் பாவச்செயல்கள் யாருக்கு தெரியப்போகின்றது என நாம் நினைக்கலாம். ஆனால் பிரம்பாவால் படைக்கப்பட்ட இந்த உளவு துறையினர் இமை மூடாமல் நாம் செய்யும் செயல்களை கவனித்துவருகின்றனர். நாம் செய்யும் பாவச்செயல்களாகட்டும் புண்ணிய செயல்களாகட்டும் உங்களால் படைக்கப்பட்ட இந்த நபர் இன்று இப்படிபட்ட செயலைசெய்து கொண்டுள்ளார் என அனைத்தையும் தகவல் களாக பிரம்மாவிற்குஅனுப்பி வருகின்றார்கள். இறைவனால் அவ்வாறு அமைக்கப்பட்டநபர் களே அஷ்டதிக் பாலகர்கள் என அழைக்கப்படுகின் றார்கள்.

எந்தவொரு கடவுளை நினைத்தும் வேண்டி யும் பூஜைகள் செய்வோம். ஹோமங்கள் செய் வோம். அந்த பூஜையின் போது முக்கியமாக வழி படுபவர்களில் அஷ்டதிக் பாலகர்களும் உண்டு.

திக் என்றால் திசை. அஷ்டம் என்றால் எட்டு. அமாவாசையில் இருந்தும் பௌர்ணமியில் இருந்தும் வருகிற எட்டாம் நாள் அஷ்டமி திதி என்று அதனால்தான் சொல்கிறோம்அஷ்டதிக் பாலகர்களில் 'அஷ்டம்' என்றால் 'எட்டு','திக்' என்றால் 'திசை', 'பாலகர்கள்' என்றால் 'காப்பவர் கள்' என்பது பொருளாகும். இதன் பொருள்எட்டுத் திசை காவலர்கள் அல்லது எண்திசை நாயகர்கள் என்பதாகும். இந்த எட்டு பேர் தான் பூமியில் நடக்கும் நன்மை, தீமைகளுக்கு சாட்சியாக இருக் கிறார்கள். ஆகாயத்தில் ஏற்படும் தீய விளைவுகள் பூமியை தாக்காதவாறு காக்கின்றனர்.

அந்த வகையில், இந்திரன், அக்னி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய இவர்களைத் தான் நாம் அஷ்டதிக் பால கர்கள் என்கிறோம். இவர்களை வணங்கினால் எல்லா வளங்களும் கிடைப்பதாக கருதப்படுகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையின் நாயகர்கள். அந்தந்த திசைக்கு அதிபதிகள். இவர்களை பற்றி சற்று சுருக்கமாகக் காணலாம்.

**இந்திரன்:** கிழக்குத் திசை. விடியலுக்கும் சூரியோதயத்திற்கும் பெயர் பெற்ற கிழக்குத் திசைக்கு அதிபதி, இந்திரன். தேவர்களின்




தலைவன் இவரே அஷ்ட திக் பாலகர்களின் தலைவர். இவர் கிழக்கை ஆள்பவர். வெள்ளை யானை தான் இவரது வாகனம். வஜ்ரம் என்னும் ஆயுதத்தை இவர் தாங்கி இருப்பார். இந்திரனின் மனைவி இந்திராணி. தேவர்களுக்கு மட்டுமின்றி, அஷ்டதிக்குகளுக்கும் அஷ்டதிக் பாலகர்களுக்கும் தலைவன் இவர். இவரை வேதங்கள் தேவர்களின் தலைவர் என்றும் சித்தரித்துக் கூறுகிறது. . இவரை வணங்குவதால் சகல ஐஸ்வரியத்தையும் சுகத்தையும் பெறலாம். அதாவது பூமியிலேயே சொர்க்கத்தைக் காணலாம். வழிபடும் போது இந்திரனை நினைத்து வேண்டிக்கொண்டால், சகல வளமும் நலமும் கிடைக்கப் பெறலாம். நோய் நொடியில்லாமல் ஆரோக்கியத்துடன் வாழலாம். தீராத நோயையும் தீர்த்துவைப்பார் இந்திரன். அப்படிப் பட்ட இந்த இந்திர பகவானின் தியான ஸ்லோகம்

"ஓம் சஹஸ்ர நேத்ராய வித்மஹே வஜ்ர
ஹஸ்தாய தீமஹி தன்னோ இந்திர
ப்ரசோதயாத்."

இந்த ஸ்லோகத்தை சொல்ல நன்மைகள் அதிகம் கிடைக்கும்.

**அக்னி பகவான்:** அஷ்டதிக் பாலகர்களில், இரண்டாவது இடத்தைப் பிடிப்பவர் அக்னி பகவான் ஆவார். இவர் தென்கிழக்கு திசையின் அதிபதியாகக் கருதப்படுகிறார். நெருப்பிற்கான அதிகாரம் இவருடையது. யாகத்தின் சமயத்தில் தீயில் போடப்படும் நிவேதனப் பொருட்களை அக்னி மற்ற தெய்வங்களுக்கு எடுத்துச் செல்வதாக புராணங்களில் ஒரு நம்பிக்கை உண்டு.. அக்னி தேவனின் மனைவி சுவாகா தேவி என்கிறது

புராணம். அதனால்தான், அக்னியில் நெய் வார்க்கும் போது, ஒவ்வொரு முறையும் 'சுவாகா' என்று சொல்லுகிறோம் என விவரிக்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள். ஹோமங்களின் போது, அதில் இடப்படுகிற நைவேத்தியங்களை மற்ற தெய்வங்களுக்கு நம் சார்பாக எடுத்துச் சென்று கொடுக்கும் பணியைச் செவ்வனே செய்பவர் இவர். எந்தவொரு சமயமாக இருந்தாலும் அக்னி தேவனை வணங்கி வழிபட்டால், சகல தெய்வங்களின் அருளையும் பெறலாம். தனம், தானியம் பெருகும். இல்லத்தில் சுபிட்சம் நிலவும்.

ஆட்டுகிடா வாகனத்தின் மீது அமர்பவர். இவருடைய ஆயுதம் தீச்சுவாலையுடன் கூடிய வேல் ஆகும். இவரை வழிபட தேக வனப்பு, பலம், மன அமைதி, குடும்ப மேன்மை கிடைக்கும்.

இவருடைய தியான ஸ்லோகத்தை தினமும் கூறி வந்தால்... நெருப்பின் மூலமாக இழப்புகள் மற்றும் உயிர் சேதம் ஏற்படாது.

ஸப்தார்சிஷம் ச பிப்ராணம்
அக்ஷமாலாம் கமண்டலும் மி
ஜ்வாலாமாலாகுலம் ரக்தம்
ஸக்திஹஸ்தம் சகாஸநம் மிமி

**எமதர்மன்**அஷ்டதிக் பாலகர்களில், மூன்றாவது இடத்தைப் பிடிப்பவர் 'யமன்' ஆவார். வேதங்கள்... இவரை தெற்குத் திசையின் காவலர் என்றும்... இவரே எமதர்மன், தருமராஜா, தருமதேவன், காலதேவன் என்றும் பல பெயர்களில் அழைக்கிறது. இவர் இறப்பின் கடவுள் ஆவார். சூரியதேவனின் மகனாகவும், சனிபகவானின் சகோதரராகவும் இவர் புராணங்களில் குறிப்பிடப்படுகிறார். யமனின் சகோதரி யமி அல்லது யமுனை ஆவாள். இவளே பாரத தேசத்தில் நதியாகப் பாய்கிறாள் என்பது இன்னொரு கூடுதல் தகவல். இவர் தேவர்களில் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவராகக் கருதப்படுகிறார். இவருடைய துணைவியார் குபேர ஜாயை ஆவார். இவர் எருமைகிடா வாகனத்தினைக் கொண்டவர். இவருடைய ஆயுதம் பாசக்கயிறு ஆகும். இவரை வழிபட நம்மைப் பற்றிய தீவினைகள் நீங்கும். தரும சிந்தனைகள் தோன்றும். நோய்கள் அகன்று, ஆயுள் சித்திக்கும். இப்படிப் பட்ட இந்த யமனின் தியான ஸ்லோகம்

அஷ்டதிக் பாலகர்கள்
தண்டஹஸ்தம் பயாநகம் மி
காலபாஸதரம் க்ருஷ்ணம் த்யாயேத்
தக்ஷிணதிக்பதிம்

**நிர்ருதி:**அஷ்டதிக் பாலகர்களில், நான்காவது இடத்தைப் பிடிப்பவர் 'நிர்ருதி' ஆவார். எதிரிகள் பயம் நீங்க !.... வழக்குகள் சாதகம் ஆக !... கடன் தொல்லை அகல !... இவரை வணங்கினாலே போதும். இவர் தென்மேற்கு திசையின் அதிபதி ஆவார். இவரின் துணைவியார் கட்கி ஆவார். இவருடைய ஆயுதம் கட்கம் என்னும் வாள் ஆகும். இவரை வழிபட எதிரிகள் பயம் நீங்கி வீரம் உண்டாகும். மனோபலம் பெருகும். மனதில் தைரியம் பிறக்கும். இறந்த பிணத்தின் மீது அமர்ந்து இருப்பதாக ஸ்லோகங்கள் இவரைப் பற்றி வர்ணிக்கிறது. இவரது தியான ஸ்லோகத்தை கீழே பார்ப்போம்.

ரக்தநேத்ரம் ஸவாரூடம் நீலோத்பல தளப்ரபம் மி
க்ருபாணபாணி மாஸ்ரௌகம் பிபந்தம்
ராக்ஷஸேஸ்வரம் மிமி

**வருணன்:**அஷ்டதிக் பாலகர்களில், ஐந்தாவது இடத்தைப் பிடிப்பவர் 'வருணன்' ஆவார். இவர் மேற்கு திசையின் காவலர் ஆவார். இவர் மழைக்கான கடவுள் ஆவார். ஆறு,குளம், ஏரி, கடல் நீர்நிலைகள் இவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படுகின்றன. ஐவகை நிலங்களில் ஒன்றான நெய்தல் நிலத்திற்கு உரிய தெய்வமாக வருணன் போற்றப்படுகிறார். இவருடையை துணைவியார் வாருணி ஆவார். இவருடைய வாகனம் மரகம் என்ற மீன் ஆகும். இவர் வருணாஸ்திரம் என்ற ஆயுதத்தைக் கொண்டுள்ளார். வருண பகவான், மேற்குத் திசையின் நாயகன். காவலன். மழைக்கடவுள் இவர். குளிர்ந்த மாலை வேளையில், வருண பகவானை நினைத்து பிரார்த்தனை செய்தால், பூமியை மழை பொழியச் செய்து குளிரப் பண்ணுவார். விவசாயம் தழைக்க அருளுவார்.இவரை வழிபட தேவையான மழை கிடைத்து உணவு பஞ்சம் தீரும். இவரை முறைப்படி வழிபட்டு வர... வீடுகளில் கூட தண்ணீர் பிரச்சனை படிப்படியாகக் குறையும். இவரது தியான சுலோகம் பின்வருமாறு...

நாகபாஸதரம் ஹ்ருஷ்டம்
ரக்தௌகத்யுதி விக்ரஹம் மி
ஸஸாங்க தவளம் த்யாயேத் வருணம்
மகராஸநம் மிமி

**வாயுதேவன்:** அஷ்டதிக் பாலகர்களில், ஆறாவது இடத்தைப் பிடிப்பவர் 'வாயு தேவன்' ஆவார். இவர் உலக இயக்கத்திற்குக் காரணமான காற்றிற்கான கடவுள் ஆவார். அனுமானும், பீமனும் வாயு புத்திரர்கள் என்பது புராணங்களின் மூலமாக அறியப்படுகிறது. இவர் வடமேற்கு திசையின் காவலர் ஆவார். இவரின் துணைவியார் வாயுஜாயை ஆவார். இவருடைய வாகனம் மான் ஆகும். இவர் அங்குசம் என்னும் ஆயுதத்தைக் கொண்டுள்ளார்.


வேலன்

– வேலன், போன்:
9894836096

# வெளியிலிருந்து வரும் எண்ணப்பதிவுகளை எவ்வாறு அகற்றுவது



www.aanmeegamalar.com

அன்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: "ஒரு சமயம் நான் என்ஸினிடஸ்ல் வெளிப்புறத்தில் உட்கார்ந்திருந்தபோது மிகவும் குளிராக இருந்தது. எனது உணர்வு நிலையை அகத்துள் திருப்பினேன்; ஒரு நொடிப்பொழுதிற்குள் நான் குளிரை சிறிதளவுகூட உணரவில்லை. ஆனந்தம் என்மேல் படர்ந்தது; இடையிடையே எனது சூழல் திரைப்பட ஒளிக்கற்றை போன்ற ஓர் ஒளியில் கரைவதைக் கண்டேன். நான் படத்தில் கவனத்தைச் செலுத்தினால், படத்தைக் கண்டேன். ஒளிக்கற்றையின்மீது கவனத்தைச் செலுத்தினால், உலகம் மறைந்தது. உங்களுடைய உணர்வுநிலை இல்லாவிடில், நீங்கள் எதையும் காணமுடியாது. எனவே உங்கள் மனதின்மீது உங்களுக்கு முழு ஆதிக்கம் இருந்து நீங்கள் அகத்தே ஆத்மனைப் பார்ப்பீர்களானால், உங்களுடைய கண்கள் திறந்தே இருந்தாலும் இறைவனின் அந்த மகத்தான ஒளியை மட்டுமே காண்பீர்கள்; மேலும் அவனது பேரானந்தத்தை உணர்வீர்கள். உங்கள் கண்கள் மூலம் நீங்கள் வெளிப்புறமாகப் பார்த்தால் மட்டுமே புற உலகை உங்கள் உணர்வுநிலை அறிந்துகொள்ளும். இவை அனைத்தும் இறைவனின் திரைப்படமே அன்று, என்ஸினிடஸ் ல் ஒரு புறத்தில் இறைவனிடமிருந்து வந்த எனது உணர்வு நிலையின்

127
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

கனவுகளான உணர்ச்சிகள் மற்றும் எண்ணங்கள் மறுபுறத்தில் நான் என்னுள்ளே ஆழ்ந்து விட்டதும், உணர்வுகளே இல்லை; தூய ஆனந்தம் மட்டுமே இருப்பதை நான் காணமுடிந்தது. அந்த கடுமையான குளிரில் நான் நீச்சல் ஆடையை மட்டும் அணிந்து அமர்ந்து இருந்தாலும், குளிரும் புறக்காட்சியும் மறைந்து ஆனந்தம் மட்டும் எழுவதை நான் உணர முடிந்தது; பிறகு புலனுணர்வுகளின் மெல்லிய பதிவுகளை அந்தப் பேரானந்தத்துடன் சேர்ந்து நான் அறிய முடிந்தது. இதைப்பயிற்சி செய்யுங்கள். இறைவனின் இருப்பைப் பயிற்சி செய்யுங்கள். ஒரு சிறு பிராத்தனையுடனோ அல்லது ஒரு சிறிய ஒளியைக் கண்டுவிட்டோ, பிறகு உறங்கச் செல்வதில் திருப்தி அடையாதீர்கள்; உறக்கம் ஒரு போதை மருந்து பாலுணர்வை உங்களால் நன்றாகக் கட்டுப்படுத்த முடிந்தால்; உங்கள் ஆன்மாவின் அனைத்து சக்தியுடனும் நீங்கள் இறைவனை நாடினால், அவன் உங்களிடம் வருவான். நீங்கள் ஒரு சிறந்த ஒழுக்கவாதியாகவும், ஆன்மீக நோக்குடையவராகவும் இருந்தாலும், இறை ஞானம் இல்லாவிடில் நீங்கள் பெற்றிருப்பது மிகச் சொற்பமே.”



குருப்ரியா

மேலும் அவர் கூறுகிறார்: “ எனவே, உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். சிரத்தையுடனும் இடைவிடாமலும் அதிகம் தியானம் செய்யுங்கள். இறைவனிடம் கூறுங்கள்: “எனது பலவீனங்களை நான் அறிவேன். ஆனால் இறைவா, நீயே என்னைப் படைத்தவனாதலால், அவை உன்னுடையவையாகும். இத்திரைப்படத்தைக் காட்டுபவன் நீதான். ஆகையால் எனக்கு உன்னுடன் இருப்பதைத் தவிர வேறெந்த விருப்பமும் இல்லை. நீ, இன்ப மற்றும் துன்ப முடிவுகளின் இருமைத்தன்மைகளிலிருந்து, விடுதலை பெற்றவன். நான் உனது குழந்தை. நானும் அவ்வாறே விடுதலை பெற்றவனாவேன்.”

“உங்களை ஒரு பாவியென்று கூறிக்கொள்ளாதீர்கள்; உங்களை தார்மீகவாதி என்று கூறிக்கொண்டு பெருமைப்பட்டுக்கொள்ளவும் செய்யாதீர்கள். மாறாக இறைவன் உங்களோடு உள்ளான். மேலும் அவனே தவிர வேறு எவரும் அல்ல உங்கள் மூலம் செயல்படுவது என்று கூறுங்கள். அப்பொழுது நீங்கள் ஒரு வித்தியாசமான ஓர் உலகைக் காண்பீர்கள். இறை உணர்வு இல்லாவிடில் போராட்டம், வன்முறை மற்றும் கொடுமையான ஏமாற்றங்கள் நிறைந்ததாக இவ்வுலகம் சாட்சி அளிக்கின்றது. ஆனால் அவனுடன் இருப்பின், அதுவே ஆனந்தத்தின் ஒரு புகலிடமாகிறது.”

“பெனடட்டின் கீதம் (ஸாங்ஸ் ஆஃப் பெனடட்) என்ற திரைப்படத்தை நான் பார்த்துக்கொண்டிருந்தபோது, அம்மகானின் வாழ்வில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் நான் உணர்ச்சிவசப்பட்டு அழுதேன். இறுதியில், “எனக்கு என்ன ஆகிவிட்டது?” எனக்கூறிக்கொண்டேன். நான் அந்தப்படத்தை மீண்டும் பார்த்தேன். நிழல்களையும் ஒளியையும் மட்டுமே கண்டேன். நாடக உணர்வை இழந்தேன். என்னால்




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்



மேற்கொண்டு அழ முடியவில்லை. ஒரு மகத்தான ஆனந்தநிலை படர்ந்தது” என்கிறார் அன்பு குருதேவர்.

உணர்வுநிலை எல்லையற்ற அளவை உடையது.

குருதேவர் அருளுகிறார்: “உங்களுடைய மனம் ஒரு பரந்த எல்லையற்ற அளவைக்கொண்டது. ஆனால் நீங்கள் அதை உணர்வதில்லை. என்னால் நித்திரையின் ஆழங்களுக்கும் சென்று உறக்கநிலையை அனுபவிக்கவும், அதே சமயம் உலகத்துடன் ஈடுபட்டு இருக்கவும் முடியும். அல்லது நான் உறங்கி, கனவு காணும் அதே சமயம் என்னைச் சுற்றி நடைபெறும் அனைத்தையும் கேட்கவும் கூட முடியும். சில சமயங்களில் ஒரு சாதாரண மனிதனைப்போல் நான் உறங்குகிறேன். பின்னர் மீண்டும் உறங்கி நானே உறங்குவதை உணர்வு பூர்வமாக என்னால் கவனிக்கவும் முடியும். உயர் உணர்வு நிலையில் தேகமும் மனமும் உறங்கிக்கொண்டிருப்பதை உங்களால் காணமுடியும்; இருப்பினும் எல்லா நிகழ்வுகளையும் பற்றிய முழு விழிப்புணர்வையும் நீங்கள் பெற்றிருப்பீர்கள். நினைத்த மாத்திரத்திலேயே உயர் உணர்வு நிலைக்குச் செல்லவும் நினைத்த மாத்திரத்திலேயே சாதாரண நிலைக்குத் திரும்பவும் தேவையான வல்லமையை நீங்கள் விருத்தி செய்துகொள்ளும் பொழுது மட்டுமே இது சாத்தியமாகும்.”

மேலும் அவர் தொடர்கிறார்: “ தியானம் செய்வதாலோ (அல்லது கற்பனை செய்வதாலோ அல்லது அக அமைதியை பயிற்சி செய்வதாலோ) நீங்கள் தேகத்திலிருந்து வெளியேறி, திரும்பிவர முடியாமல் போய்விடக்கூடுமென ஒருபோதும் கவலைப்படவேண்டியதில்லை. அந்தக் கருத்து முற்றிலும் தவறானது. தேகத்துடன் உள்ள மாயையால் தூண்டப்பட்ட பந்தம் மிகவும் சக்தி வாய்ந்தது; ஆகையால், அவ்வளவு சுலபமாக நீங்கள் அதிலிருந்து தப்பிக்க முடியாது! உங்களுடைய சாதாரண விழிப்பு உணர்வு நிலை அகற்றப்பட்டாலும்கூட, உங்களுடைய ஆழ்மன உணர்வுநிலை தேகத்துடன் பந்தப்பட்டு இருக்கும் காலம் வரை, தேகத்தைவிட்டு நீங்கள் நிரந்தரமாக நீங்கிவிட முடியாது.”

அன்புமிக்க, பிரேமாவதாரமாகிய குருதேவர் கூறியுள்ள போதனைகளை நன்கு படித்து மனதில் தக்க வைத்துக்கொள்ளவேண்டும். அவருடைய எல்லா போதனைகளும் கடைபிடிக்கத் தக்கதாகும். நம் ஆன்மாவை பரமாத்மாவிடம் சேர்ப்பதற்கான எல்லா வழிவகைகளும் அவருடைய போதனைகளில் உள்ளன. அவற்றைப்படித்தபின்னர் பயிற்சி செய்தால் வைரம் ஒளியை பிரதிபலிக்கச் செய்வது போன்று அவருடைய போதனைகளும் அதைத் தொடர்ந்துள்ள நம் பயிற்சியும் இறைவனின் ஒளியை பிரதிபலிக்கச் செய்யும். இறைவன் வேண்டுமென்ற எண்ணம் இருந்நால் குருதேவருடைய போதனைகளைத் தாமாகவே கடைபிடிப்பர். அப்பொழுது வெளியிலிருந்து வரும் எண்ணப்பதிவுகளை அகற்றலாம்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# மனித உடலும், பாம்பின் தலையும் கொண்ட
# கேது ஸ்தலம்

சோழவள நாட்டில் எண்ணற்ற ஆலயங்கள் சிறப்புக்குரியவை. அவற்றுள் செம்பங்குடியும் ஒன்றாகத் திகழ்கிறது.

அமிர்தம் வேண்டி தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அதில் கிடைத்த அமிர்தத்தை தேவர்களுக்கு பகிர்ந்தளித்தார் மகாவிஷ்ணு. விப்ரசக்தி என்னும் அசுரனுக்கும், இரணியனின் தங்கை சிம்ஹிக்கும் பிறந்தவன் ஸ்வபானு. அசுர குலத்தவன். தேவ வடிவம் பூண்டு அமிர்தத்தை உண்டான். குறிப்பால் இதனை உணர்ந்த, சந்திர சூரியர், அவ்வசுரனின் தலையில் ஓங்கி அடிக்க, அவனது தலை சிரபுரம் என்னும் சீர்காழியிலும், உடல் செம்பாம்பினன்குடி என்னும் இச்செம்பங்குடியிலும் விழுந்தது.

சிவந்த மனித உடலும், பாம்பின் தலையும் கொண்ட கேதுவின் வடிவம் இங்கு குடிகொண்ட தால் இத்தலம் செம்பாம்பினன்குடி ஆனது.

அமுதுண்ட அவை, ஈசனை நோக்கி கடும் தவமிருந்து, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பூஜித்து, "அகில உலகத்தையும் ஆட்டிப்படைக்கும் வரமும், சந்திர சூரியரை விழுங்கும் பலமும்" வேண்டுமெனக் கேட்டன. ஈசனோ, சூரிய சந்திரர் இன்றி உலகம் தத்தளிக்கும். இருப்பினும், கிரஹண காலங்களிலும், அமாவாசையிலும் அவர்களை விழுங்கும் திறன் பெற அருள் பாலித் தார். இருவருக்கும் கிரகபதவியும் வழங்கினார். அவர்களே இராகு கேது ஆவர்.

எனவே, ஆதி கேதுத்தலமாக போற்றப்படு கின்றது இந்த செம்பங்குடி.

அருணாசலக் கவிராயரின் சீர்காழி தல புராணத்தில் இப்பதி செம்பாம்பினன்குடி என்றும், கேதுபுரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திரு முறையுள் மனித இடர்களைப் போக்கும் தலங் களுல் ஒன்றாக விளங்கும் இந்த தலத்தை வைப்புத்தலமாக போற்றியுள்ளார்.

ஊருக்கு சற்றுத் ஒதுங்கிய இடத்தில் ஆலயம் அமையப்பெற்றுள்ளது.

சுற்றிலும் வயல்வெளிகள். ரம்மியமான சூழல். தோரண வாயிலின் நேராக ஈசனது சன்னிதி அமைந்துள்ளது. விதானத்தில் அம்மையப்பர் தரிசனம். மகா மண்டபம், அர்த்த மண்டபம் கடந்து கருவறையுள் கண் நோக்க... அற்புத தரிசனம். அழகிய சிறிய திருமேனியராய்,













ஆனந்தமாய் வீற்றருள்கின்றார் ஸ்ரீ நாகநாத ஸ்வாமி. ஆதியில் கேது பூஜித்த லிங்கமாதலால் கேதீஸ்வரர் என்றும் அழைக்கப் படுகின்றார். பல ஜென்ம நாக தோஷங்களையும் நொடிப்பொழு தில் நீக்கி, சுகத்தை அருளுபவர்.

ஆலய வலம் வருகையில் முறையான கோஷ்ட தெய்வங்க ளோடு, தனிச் சன்னிதிகளில் வீற்றிருக்கும் கணபதி, கந்தன் மற்றும் கஜலக்ஷ்மியை வணங்கு கின்றோம்.

ஸ்வாமிக்கு வாம பாகத்தில் அம்மையின் சன்னிதி கிழக்கு முகமாக அமைந்துள்ளது.

அம்பிகையாக ஸ்ரீ கற்பூரவல்லி சிறிய திரு மேனி கொண்டு புன்னகை சிந்துகின்றாள். திரிபுரசுந்தரி என்றும் அழைக்கப்பெறுகின்றாள்.

ஆதிகேதுவின் சன்னிதி ஆலய வாயு பாகத்தில் தனியாக அமைந்துள்ளது. சிறிய ஆலயம். சீர்மிகுந்து விளங்குகின்றது. தினமும் ஒரு கால பூஜை நடத்தப்படுகிறது.

ஆலய மெய்க்காவலர் உதவி யுடன் பகல் வேளைகளில் எப் போது வேண்டுமானாலும் ஸ்வாமி தரிசனம் செய்யலாம்.

ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் பசும்பாலால் அபிஷேகம் செய்து, சிவந்த அல்லி மலர்களால் அர்ச் சித்து, புளியோதரை நிவேதனம் செய்து பிரார்த்திக்க, முன் ஜென்மங்களில் ஏற்பட்ட நாக தோஷங்களிலிருந்து நிவர்த்தி பெற லாம்.



மோ.கணேஷ்

அதோடு சிறந்த அறிவையும், பேராற்றலையும் பெற்றிடலாம்.

சிவபக்தியில் சிறந்தும், மோக்ஷகாரகனாகவும் திகழும் இத்தல ஆதிகேதுவை எமகண்ட வேளையில் அபிஷேக்கித்து, பல வண்ணங்கள் கொண்ட ஆடையை அணிவித்து, சிவந்த நீர் வகைப் புஷ்பங்களால் அர்ச்சித்து, கொள்ளுப் பொடிசாதம் நிவேதனம் செய்து, அராதித்து, சகலவித பாவங்களிலிருந்தும் விடு பட்டு சுகபோகங்களோடு, சகல சௌ பாக்கியங்களையும் பெற்றிடலாம்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரிலிருந்து திருமுல்லைவாயில் செல்லும் பாதையில் 3 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது செம்பங் குடி.


ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்
குருக்கள், ஆரணி, தொடர்புக்கு:
9789156179

# நமது முன்னேற்றத்தை தடுக்கும்

# ஏழு தடைகள்

### 1. வெட்கம் (shyness)

ஒரு தொழிலை செய்யும் பொழுதோ, அல்லது ஒரு செயலை செய்யும் பொழுதோ அதனை நம்மால் செய்ய முடியுமா, அதற்கு நமக்கு தகுதி இருக்கா, அதில் தோல்வி அடைந்தால் மற்றவர்கள் கேலி செய்வார்களோ என்று வெட்கப்பட்டால் முன்னேற முடியாது.

### 2. பயம் (Fear)

இதனை நம்மால் செய்ய முடியுமா. அதாவது இந்த செயலை நம்மால் செய்ய முடியுமா, இதை செய்யும் தகுதி எனக்கு உள்ளதா, மற்றவர் என்ன நினைப்பார்கள், மற்றவர் நம்மை மதிப்பார்களா என பயப்படுவது.

### 3. தாழ்வு மனப்பான்மை (poorself-image)

அவங்களுக்கு தைரியம் இருக்கு எனக்கு இல்லை. அவர்களுக்கு தகுதி இருக்கு எனக்கு இல்லை, அவர் உயர்ந்தவர் நான் தாழ்ந்தவர் என நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளல்.

### 4. நாளையவாதி (procrastination)

எந்த செயலையும் நாளை நாளை என தள்ளிப் போட்டுக்கொண்டே செல்லுதல்.

### 5. சோம்பல் (Lazyness)

சோம்பல் பட்டுக்கொண்டே எந்த ஒரு செயலையும் ஈடுபாடில்லாமல் செய்வது.

### 6. பிற்போக்கு பழக்க வழக்கம் (Nagative Habits)

பிற்போக்கான எண்ணங்கள் பிற்போக்கு செயல்கள் ஆகியவற்றால் பிற்போக்கு பழக்க வழக்கங்கள்.

### 7. எதிர்மறை எண்ணம் (Nagative thoughts)

எதிர்மறை எண்ணம் நமது முன்னேற்றத்திற்கு மாபெரும் எதிர் என்பது தெரிந்ததே, அதை களையும் வழி தெரியாமல் பலரும் திண்டாடு கின்றோம்.


aanmeegamalar.com வழங்கும்

## தினம் ஒரு திருக்குறள்







ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்


தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்
பங்குனிப் பெருந்திருவிழா
05.04.2022 செவ்வாய்
பொங்கல் விழா
06.04.2022 புதன் இரவு7.00மணி
திருக்கோவில் தேரோட்டம்
07.04.2022 வியாழன்
காலை 7மணி பால்குடம்
இரவு 10 மணி புஷ்ப பல்லாக்கு
08.04.2022 வெள்ளி
திருக்கோவில் தீர்த்தவாரி
திருவிழாகாண வரும்
பக்த கோடி
பெருமக்களே வருக!வருக!!
தாயங்கலம் முத்துமாரியம்மன் அருள் பெருக
திருகோயில் ராஜ கோபுரம், தங்கரதம் திருப்பணி
நடைபெறுவதால் நன்கொடை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்
அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடை வழங்க வேண்டுகிறேன்
மதுரை,மானாமதுரை,காரைக்குடி,
பரமக்குடி,இளையான்குடி,சிவகங்கை
அருப்புக்கோட்டை ஆகிய
ஊர்களிலிருந்து இரவு பகலாக
அரசு சிறப்பு பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
திருக்கோவில் போன் : 04564-206614
www.thayamangalammuthumari.org
thayamangalammuthumari@gmail.com
அன்புடன் அழைக்கும்
மு.வெங்கடேசன் செட்டியார்
பரம்பரை அறங்காவலர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில், தாயமங்கலம், இளையான்குடி வட்டம்.

# நொய்டாவில் சிறப்பாக நடைபெற்ற

# ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம சத்சங்கம்











ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம சத்சங்கம் (VSS), 27 வது ஆண்டு கொண்டாட்டம் நொய்டாவில் வெகு விமரிசையாக கொண்டாடபட்டது. இதன் ஒரு பகுதியாக, “ஸ்ரீமத் பாகவத சப்த மஹா யக்னம்” மகாவிஷ்ணுவின் 24 அவதாரங்களின் லீலைகள் மற்றும் அவதாரங்கள் அடங்கிய லீலைகள் மற்றும் அவதாரங்கள், 15.03.2022 முதல் 22.03.2022 வரை ஸ்ரீ ஆதி சங்கரர் கோயிலில் நடைபெற்றது.

செக்டர் 42, நொய்டா. பாகவத சப்தாஹ மகா யக்ஞம், ஈரோடு ஸ்ரீ பாலாஜி பாகவதர் தலைமையில் நடைபெற்றது இவர் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் சிஷ்யராவார்.

ஸ்ரீமத் பாகவத சப்தாஹ மஹா யக்ஞத்தின் ஒரு பகுதியாக, அஷ்டபதி பஜனைகள், நந்தோத்ஸவ், ஸ்ரீ கிருஷ்ண ருக்மணி கல்யாண வைபவம், மற்றும் டோலோத்ஸவ் ஆகியவையும் நொய்டாவில் உள்ள விஎஸ்எஸ் பஜனை மண்டலியால் நிகழ்த்தப்பட்டன. ஸ்ரீ கிருஷ்ண லீலா நடன நிகழ்ச்சியில் பல்வேறு வயதுடைய சிறு குழந்தைகள் கலந்து கொண்டனர்.

நொய்டா மற்றும் அண்டை பகுதிகளில் இருந்து பல்வேறு சத்சங்கங்களின் உறுப்பினர்களும், இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

(VSS) கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக எந்த இடையூறும் இல்லாமல் வாராந்திர விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணத்தை சபையில் ஏற்பாடு செய்து வருகிறது.



எஸ்.வெங்கடேசன்

அன்னதானம் மற்றும் ஏழை குழந்தைகளுக்கு கல்வி உதவி, இரத்த தான முகாம், குளிர்காலத்தில் போர்வை விநியோகம் மற்றும் மருத்துவ உதவி போன்ற பல்வேறு தொண்டு நடவடிக்கைகளில் (VSS) தீவிரமாக ஈடுபட்டுள்ளது.


– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண் போன்: 9811161370

ஆன்மிகம், வாழ்வியல், பொருளாதாரம், வியாபாரம், தொழில், கலை, அறிவியல், மொழிபுலமை, கட்டிடக்கலை, மருத்துவம், ஜோதிடம், விஞ்ஞானம், போன்றவற்றை உலகிற்கு அறிமுகப்படுத்தி, சூரிய உதயத்தை கணித்து, சித்திரையின் துவக்கத்தை கண்டறிந்து, உலகிற்கு ஒளி தரும் சூரியனை மையப்படுத்தி, வருடத்தை பிரித்து, வருடத்தின் முதல் மாதமாக சித்திரையை நிர்ணயித்து, அதை தமிழர் பண்டிகையாக கொண்டாடிய முன்னோரை வாழ்த்தி வணங்குவோம்,

## சித்திரையை வரவேற்போம்

# சித்திரைத் திருநாள் வாழ்த்துக்கள்



# நற்குணங்களை மூளைக்குள் பதிவாகாமல் தடுத்திடும் பயம்

மனித உணர்வுகள் பலப்பல. அதில் பீதியை உண்டாக்கும் உணர்ச்சி மனிதனிடத்தில் இருக்கக்கூடாது. இந்த தன்மையை வேறு எச்சொல்லைக் கொண்டு குறிப்பிடுவதாய் இருந்தாலும் அதை நீ கொள்ளலாகாது. உயிர் வாழும் எந்த மனிதனுக்கும் பயமே வேண்டாம்.

❖❖❖

ஒரு ஆராய்ச்சி வழி பார்த்தால் எல்லா மனிதர்களின் உணர்ச்சிகளிலும் நிம்மதி தரும் உணர்ச்சியைப் போன்று பயத்தை தரும் உணர்ச்சியும் இருக்கும். இவ்வுணர்ச்சியும் மனித இரத்தத் தோடு கலந்ததே. ஆனால் பயமும் குணமும் ஒன்றல்ல. பயத்தை குணமாகக் கொள்ளாதே. பயத்தை குணமாகக் கொண்டால் அது ஆசையிலும் மறைமுகமான தீய செயல்களிலும் உன்னை ஈடுபடச் செய்யும். தீவிரவாதக் கொள்கையும் உலகில் பயத்தை தரும் ஒரு கொள்கையே. பயந்து நடுங்குகின்றவனே மறைந்திருந்து தீவிர வாதத்தை செய்கிறான். நேரடிவாதம் என்பது தன்மையாகும்.

❖❖❖

பெரும்பாலும் மனிதன் தன்னிடம் தோன்றும் எல்லா உணர்ச்சிமயமான நிலை, கொள்கை இவைகளை கட்டுப்படுத்த வேண்டும். சீர் செய்துவிட்டால் நல்லதே. முதலில் மனிதன் செய்ய வேண்டியது தன்னிடம் தோன்றும் உணர்ச்சியை வெற்றி கொள்ள வேண்டும். பிறகே அவனுக்கோ



உனக்கோ உன்னுடைய புத்தியைப் பிடிக்கின்ற கொள்கை ஏற்படுகின்றது. பிறகு நல்ல செயல்களுக்கு தயாராய் இருக்கின்றான்.

❖❖❖

மனம் என்பது புத்தியின் மேலான சிந்தனை ஆகும். புத்தி என்பது உள்ளே இருப்பது. இதற்கு உதாரணம் ஒரு முட்டைக்கோஸ் மீது மேலே உள்ள இலையைப் போன்றதே ஆகும். இதுபோல உள்ள மனம் மட்டுமே தேக அபிமானத்தை கொண்டு பற்றைக் கொண்டிருக்கிறது. பற்றே பாதுகாப்பை விரும்புகிறது. அதுவே பயத்தின் கருவி. இந்த குணம் உனது முன்னேற்றத்திற்கு பயன்படவே படாது. உயர்ந்த தத்துவத்தைத் தொட உன்னால் சிந்திக்கவும் முடியாது.

❖❖❖

இயற்கை என்ற உலகில் பற்றுள்ள நிலை, பற்றையறுக்கும் விருப்பம் என்ற பலநிலைகள் உள்ளன. ஆணோ பெண்ணோ இருவரும் இந்த இரண்டு தன்மைகளையும் சரிபார்த்து கொள்ள வேண்டும். அவர்களிடமே அன்பு, காதல் இவை பிறக்கின்றன.

❖❖❖

அன்பு வடிவமுள்ள மனதில்தான் சுத்தமான காதல் பிறக் கும். வெறுக்கும் குணமுள்ள மனிதனுடைய மனதில் சில சமயம் காதல் அரும்பு விடுவதைப் போன்று தோன்றும். அது காதலல்ல வெறியே. இதனால்தான் சிலர் காதலில் தோல்வி அடைந்தவுடன்

சமுதாயத்தையும், சூழ்நிலையையும், கடவுளையும், மதத்தையும் தவறாக வெறுக்கிறார்கள். தற்பொழுதும் எப்பொழுதும் வெறுப்பு அல் லது வெறுப்புத்தன்மை இவை இரண்டும் உனக்கு கூடவே கூடாது. அவைகளிடம் போய் வருகிறேன் என்று விடை பெற்றுக் கொள்.

❖❖❖

வெறுப்புப் பிரச்சாரம் என்ற கொள்கையை எப்பொழுதும் தூவாதே, கொள்ளாதே, தூண்டாதே. ஏன் தெரியுமா? இந்த செய்கை நல்ல பாம்பின் விஷத்திற்கு சமம். தயவு செய்து இக்கொள்கையை வலியுறுத்தி தீமை என்ற பூதத்தைப் பிறக்க செய்யாதீர்கள்.

❖❖❖

உணர்ச்சி வயப்படும் மக்கள் அனைவரும் மண் மீது பாசம் வைத்த மக்களே, பாசம் என்பது மண்ணோடு தொடர்புடையது. உயிரோடு தொடர்புடையதல்ல. இத்தகைய பாசமுள்ள மக்கள் வேறு பற்பல தன்மையுள்ள உணர்ச்சி களால் கூட நெகிழ்ந்து விடுவார்கள். நீ சிந்தனையில் எவரெஸ்ட் உச்சியை தொட வேண்டும் என்றால் இத்தகைய உணர்ச்சிகளை எல்லாம் நீந்தி மேலே செல்.

❖❖❖

உண்மையை உணருதல், சிந்தித்தல் இவை இரண்டுமே மனிதனின் உருவம். உணர்ச்சி வயப்படும் மனிதனுக்கு நான் குறிப் பிட்ட தன்மையை எய்த முடியாது.

❖❖❖

பயப்படுதல் அல்லது பயப்படுகின்ற தன்மை ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடாது. இது எந்த வகையிலும் நற்குணங்கள் நுழைய உனது மூளைக்குள் இடம் கிடைக்காமல் போய்விடும்.

❖❖❖

நற்குணத்தை தெளிக்கின்ற மூளை ஒரு துலாக்கோலைப் போன்ற வரலாற்றினை வாழ்க்கையில் படைக்கும். கெட்ட புத்தியை வெளிப்படுத்தும் மனிதனின் சிந்தனை பல்வேறு வகையான கொடிய திட்டங்களை தீட்டும். கொடிய தன்மை திட்டங்கள் எந்த துறையிலும் இருக்க கூடாது. கட்டாயம் இது அரசியலிலிருந்து விடுபட வேண்டும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

# நின்ற கோலத்தில் அருள்புரியும்
# தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளையார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில்இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.


meegamalar.com

இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப்பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உருவாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங்கள்










காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட்டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், ‘தாய்மங்கலம்’ என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக்கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடியில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பன்னெடுங்காலம் முன், ராமநாதபுரத்தைச் சேர்ந்த வணிகர்கள், தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். அவர்களில் ஒருவர், மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். அவருக்கு நெடு நாட்களாக குழந்தை இல்லை. ஒவ்வொருமுறையும் மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும் அவ்வியாபாரி, தவறாமல் மீனாட்சியம்மையையும், சொக்கநாதரையும் வழிபட்டு, தனது உள்ளக் குமுறலைக் கொட்டி தீர்த்துவிட்டு வருவார்.

அப்படி ஒருநாள், மதுரையில் இருந்து ஊர் திரும்பிக்கொண்டிருந்தார் வியாபாரி. வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரியவில்லை என்றும் கூறி தேம்பினாள்.

"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின்றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத்துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந்தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அவர்கள் சென்ற வழியில் ஆறு ஒன்றுகுறுக்கிட்டது. பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு ஆற்றில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் ரொம்பவே மனம் வெறுத்துப்போன அந்த வணிகர் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப்






போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமையிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான் உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்து எழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வ மானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக்கப் பட்டவர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும் என்பது இங்குள்ளமக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த் தனை நிறைவேறி நேர்த் திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காண லாம்.

மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது.

கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக் கின்றனர். கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்து கின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக் காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்தி பனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்க லத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.

**– முதன்மை செய்தியாளர்: அழகுராஜா செல்: 9994162192**



# அட்சயதிருதியை... தங்கத்தை பெருக்குமா?

# மக்களை முட்டாளாக்கும் நகைகடைகள்

ஒவ்வொரு வருடத்திலும் ஒருசில நாட்கள் மிகவும் புண்ணிய, புனித நாளாக விளங்குகிறது, அந்தவகையில் அட்சய திருதியை என்பது, மிகச்சிறந்த சிறப்புகள் கொண்ட தினமாக விளங்குகிறது.

சோதிடத்தின் படி ஒவ்வொரு வருடத்திலும் மூன்றரை பௌர்ணமி நாட்கள் (திதிகள்) மிக மங்களகரமானவையாகக் கருதப்படுகின்றன. இவை மூன்றரை திதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. அவை:

சித்திரை மாத வளர்பிறையின் முதல் திதி “புது வருட துவக்கமாகவும்'',

ஆவணி மாதத்தின் வளர்பிறையின் பத்தாம் திதி “விஜய தசமியாகவும்'',

வைகாசி மாதத்தின் வளர்பிறையின் மூன்றாம் திதி “அட்சய திருதியையாகவும்''

கார்த்திகை மாதத்தின் வளர்பிறையின் முதல் திதி அரை திதியாகக் கணக்கில் கொண்டு “மூன்றரை 3½ முகூர்த்தங்கள்” என்று அழைக்கப்படுகின்றன.

முதல் மூன்று திதிகள் முழுமையான திதிகளாகவும் கடைசி திதி அரை திதியாகவும் கணக்கிடப்படுகின்றன. இவைமொத்தம் சேர்ந்து மூன்றரை முகூர்த்தத்தை வழங்குகின்றன. சோதிட சாத்திரத்தின்படி இந்நாளில் சூரியனும் சந்திரனும் சம அளவு உயரொளியுடன் விளங்கும் என நம்பப்படுகிறது.

அட்சய திருதியை நவன்ன பர்வம் எனவும் அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட மூன்றரை நாட்களில், இறை பாராயணம், தவம், கொடைகள், சடங்கு ரீதியான முழுக்கு, தியாகங்கள், வேள்வி செய்தல் ஆகியன செய்தால் பல்வேறு நன்மைகள் ஏற்படும்.

இந்த தினத்தில் மறுமைக்கு (மனித வாழ்க்கை முடிவுக்கு பின்) வேண்டிய செயல்களை செய்தால் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒருசில காரண காரியங்களால் இம்மைக்கு (தற்போதைய வாழ்க்கைக்கு) வேண்டியவற்றை செய்தாலும் இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்று திரித்து கூறப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மொத்தத்தில் இது ஆன்மீக நடவடிக்கைகளுக்கே உகந்ததேயன்றி, உலகாதாயச் செயல்களுக்கு உகந்த நாள் அல்ல என்று கருதப்படுகிறது.

இருப்பினும், இந்த திதியில் உலகாதாய நடவடிக்கைகள் தொடங்குவதும் கூட சிறப்பே. ஆனால் இந்து மதத்தின் நல்ல நேரம் பார்க்கும் சோதிட சாத்திரத்தின் நேரத்துடன் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் கோள்களின் நகர்வும் அது போன்ற அம்சங்களும் செயலைச் செய்பவருக்கு சாதகமாக இருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதுபோன்ற நல்ல நாட்களை பின்பற்றுபவர்கள் இந்தத் திதியை குருட்டுத்தனமாக அனைத்து விதமான வாழ்வுசெயற்பாடுகளைத் துவக்கவும் நடத்தவும் பயன்படுத்தக் கூடாது. இந்த நாட்களில் செய்யப்படும் செயல்களுக்கு இரட்டிப்பு பலன் கிடைக்கும் என்ற காரணத்தினால், முடியாத செயலை

கஷ்டப்பட்டு செய்து பலனை எதிர்பார்த்து காத்திருக்கக் கூடாது.

ஆக மொத்தத்தில் இந்த அட்சய திருதியை என்பது ஒருசிறப்பு வாய்ந்த நாள் இந்த நாளில் பொன்நகைகள் வாங்கினால் சுபிட்சம் பெருகும் என்று இந்து தர்ம சாஸ்திரம் எதுவும் கூறவில்லை, தற்போது சில வருடங்களாக அட்சய திருதியை நாள் அன்று நகை கடையில் வரிசையில் நின்று நகை வாங்குவது என்பது சொல்லப்படாத, எழுதப்படாத மரபாக மாறிவருகிறது. இவை அனைத்தும் தங்க நகை வியாபாரிகள், ஊடகங்களின் உதவியுடன் நடைமுறைக்கு கொண்டு வந்தவையே.

வீட்டில் உள்ள பழைய நகையை சுத்தம் செய்து லட்சுமி, குபேரர் முன்பு வைத்து பூஜை செய்தாலே இந்நாள் விஷேஷமானதாக இருக்கும், அன்றைய தினம் கனகதாரா ஸ்தோத்திரத்தை லட்சுமி தேவியின் முன்பு பாராயணம் செய்தால் சகல ஐஸ்வர்யம் குடும்பத்திற்கு கிடைக்கும்.

மேலும் செவிவழிச் செய்தியாக, இந்த நாளில் வீட்டிலுள்ள பல்லிகள் யார் கண்ணிலும் தென்படாமல் மறைந்து விட வேண்டும் என்று வாஸ்து பகவான் கட்டளையிட்ட நாளாகவும் கூறுவார்கள்..

"அட்சய திருதியை என்பது ஒருசிறப்பு வாய்ந்த நாள் இந்த நாளில் பொன்நகைகள் வாங்கினால் சுபிட்சம் பெருகும் என்று இந்து தர்ம சாஸ்திரம் எதுவும் கூறவில்லை, தற்போது சில வருடங்களாக அட்சய திருதியை நாள் அன்று நகை கடையில் வரிசையில் நின்று நகை வாங்குவது என்பது சொல்லப்படாத, எழுதப்படாத மரபாக மாறிவருகிறது."

www.aanmeegamalar.com

## இந்த சிறப்பு தினத்தில் நடைபெற்ற விஷேஷங்கள்

இந்து இதிகாசப்படி, அட்சஷய திருதியை நாளன்றே வேதவியாசர் மகாபாரத இதிகாசத்தை விநாயகரிடம் எழுதச் சொல்லி கட்டளையிட்டார்.

திருமாலின் அவதாரமான பரசுராமரின் பிறந்தநாளாகவும் கடைபிடிக்கப்படுகிறது.இன்றும் கோவாவும் கொங்கண் பகுதியும் பரசுராம சேத்திரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

வைசாக மாதத்தின் வளர்பிறையின் மூன்றாம் நாளான அட்சய திருதியை வருடத்தின் மிகப் புனிதமான நாட்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

பொதுவாக இந்த நாளில் திருமாலை நெல் அரிசியுடன் வணங்கியும் உண்ணா நோன்பிருந்தும் வழிபடுவர். இந்நாளில் கங்கை நதியில் நீராடுவது மிக மங்களகரமானது எனக் கருதப்படுகிறது.

காசியில் அன்னபூரணித் தாயாரிடமிருந்து, சிவபெருமான் தமது பிட் சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்ற தும் அட்சய திருதியை அன்றுதான்.

பாஞ்சாலியின் மானம்



www.aanmeegamalar.com

# வாஸ்து தோஷம் பீடையை நீக்கும் பல்லி




ஒருசில சமுதாய மக்கள் பல்லியை வழிபடவும் செய்வார்கள். இந்த அட்சய திருதியை நாளன்று பல்லியை கண்டு விட்டால் எல்லா பீடைகளும் நீங்கி, திரிஜென்ம பாபமும் நீக்கப்பெற்று அனைத்து செல்வங்களும் பெற்று லட்சுமி கடாக்ஷத்துடன் வாழ்வர். என்று அந்த குறிப்பிட்ட சமுதாயத்தினர் நம்பிக்கையாகவும் உள்ளது.

காக்க, கண்ணன் ‘அட்சய’ என்று கூறி பாஞ்சாலியின் ஆடையை வளரச் செய்ததும் அட்சய திருதியை நாளன்றுதான்.

வேதத்தில் அட்சய திருதியை நாளில் அறிவு பெறுதல் அல்லது கொடையளித்தல் நல்ல பலனளிக்கும் எனக் கூறுகின்றன. இது புதிய வணிகத்தினையோ அல்லது முயற்சியையோ துவங்க வெகு நன்னாளாகக் கருதப் படுகிறது. பலர் இந்த நாளில் தங்கம் அல்லது சொத்து வாங்குகின்றனர்.

மக்கள் இந்த நாளில் உண்ணாநோன்பும் பூசைகளும் கடைபிடிக் கின்றனர். விசிறி, அரிசி, உப்பு, நெய். சருக்கரை, காய்கறிகள், புளி, பழம், துணிகள் ஆகியவற்றை கொடையாக அளிக்கின்றனர். இந்த நாளில் திருமாலை வணங்குகின்றனர். தீப வழிபாடு செய்யும் போது சிலையின் மீது அல்லது அருகில் துளசி தீர்த்தம் தெளிக் கப்படுகின்றது.

வங்காளத்தில், அட்சய திருதியை நாளில், “அல்கதா” எனும் விழா கொண்டாடப்படுகிறது. அது விநாயகர் மற்றும் லட்சுமியை வணங்கி புதிய வணிகக் கணக்குப் புத்தகத்தை எழுதத் தொடங்கும் நாளாகும். வங்காளிகள் இந்த நாளில் பல சமயச் சடங்குகளையும் செய் கின்றனர். அட்சய திருதியை திருமணங்களுக்கு ஏற்ற காலமாகவும் கருதப்படுவதால் அந் நாளில் பெரும் எண்ணிகையிலான திருமணங்களும் நடத்தப்படு கின்றன.

செல்வத்திற்கு அதிபதியான குபேரரே செல்வ மிக்க கடவுள் என நம்பப்படுகிறார். இந்த நாளில் குபேரர் கூட விஷ்ணுவின் மனைவியும் செல்வத் திற்கான தெய்வமான லட்சுமியை வணங்கு வார் என லட்சுமி தந்தரம் எனும் நூல் கூறுகிறது.

இந்த நாளில், குபேர லட்சுமி பூசை நடத்தப் படுகிறது. அதில் லட்சுமி உருவப்படத்துடன்குபேரரின் அடையாளமான சுதர் சன குபேர எந்திரமும் ஒன்றாக வைக்கப்பட்டு வணங்கப் படுகிறது.

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்















# கன்று கட்டும் தறியை சிவனாக வழிபட்ட பக்தை

நாகப்பட்டினம் திருத்துறைப்பூண்டி சாலையில் வருவோர் சாட்டியக்குடி வந்து, அக்கூட்டுரோடில் பிரியும் சாலையில் 2 கி. மீ. சென்று, ஆதமங்கலம் தாண்டி, "கோயில் கண்ணாப்பூர் கூட்டுரோடு" என்று கேட்டு அவ்விடத்தில் வலப்புறமாக பிரியும் உள்சாலையில் 1 கி. மீ. சென்றால் தலத்தை யடையலாம்.

திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் வருவோர் மாவூர் கூட்டுரோடு வந்து அங்குப் பிரியும் சாலையில் மருதூர் வந்து, அதற்கு அடுத் துள்ள "கோயில் கண்ணாப்பூர் கூட்டுரோடு" என்று கேட்டு அவ்விடத்தையடைந்து அங்கு (இடப்புறமாக) பிரியும் உள்சாலையில் 1 கி. மீ. சென்றால் தலத்தையடையலாம். கோயில் வரை வாகனங்கள் செல்லும். (கீழ கண்ணாப்பூர்என்று ஊர் ஒன்றுள்ளது; தலம் அதுவன்று. எனவே, "கோயில் கண்ணாப்பூர்"என்று கேட்க வேண்டும்.)

மூலவர் பாணத்தில் (தலவரலாற்றுக் கேற்ப) வெட்டிய தழும்புள்ளது; சதுர பீடம்.

இங்குள்ள நால்வர்களுள் இருவர் சம்பந்தராக வும், இருவர் அப்பராகவும் காட்சி தருகின்றனர்.

இங்கு மூலவர் சுயம்புமூர்த்தியாக அருள் பாலிக்கிறார். நடுதறிநாதர் திருமுடியில் கோடரி யின் வெட்டுக்காயம் இன்றும் உள்ளதைக் காண லாம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவா




லயங்களில் இது 184 வது தேவாரத்தலம் ஆகும்.

இறைவர் திருப்பெயர் : வஸ்ததம்பபுரீஸ்வரர், நடுதறியப்பர், நடுதறிநாதர். இறைவியார் திருப் பெயர்: ஸ்ரீ வல்லிநாயகி, மாதுமையம்மை

தலமரம் : கல்பனை (பனை மரத்தில் ஒருவகை தற்போதில்லை.)

தீர்த்தம்: சிவகங்கை. வழிபட்டோர் : இடும்பன்.

தேவாரப் பாடல்கள் : அப்பர்

தலவரலாறு

ஒரு காலத்தில் சிவபெருமான் உமாதேவி யாருடன் கயிலாய மலையில் வீற்றிருந்தார். படைத்தல் முதலிய தொழில்கள் பிரமதேவனை முதலாகக் கொண்ட தேவர்களால் நடத்தப்பெற் றன. அப்பொழுது இறைவன் முன்பு சுதாவல்லி என்னம் வித்யாதரப் பெண் உமை உருவம் தாங்கி நடித்து இறைவனுக்கு மகிழ்ச்சி உண்டாக் கினாள்.

இதைக்கண்ட உமாதேவியார் சுதாவல்லியை நோக்கி தன்னுருக்கொண்ட அவளிடத்தில் சினங்கொண்டு, "நீ மண்ணுலகத்தில் பிறக்க' எனச் சபித்தார். பின் நிகழ்ச்சி அறியாது நடித்த சுதாவல்லி கண்கலங்கினாள். என்ன செய்வேன் என பதறினாள். அப்பொழுது இறைவி, "நீ மண் ணுலகம் அடைந்து சிவனை பூஜித்து எம்மை அடைவாய்' எனக்கூறி அருள்பாலித்தாள்.

அப்படியே சுதாவல்லி தென்தமிழ் நாட்டை அடைந்து, தேவூருக்குத் தென்பால் திகழ்கின்ற







இத்திருத்தலத்தில் பரம்பரை சைவ வேளாளர் மரபில் சிவஞானம் நிரம்பப் பெற்று பிறந்து கமலவல்லி என்னும் திருப்பெயருடன் வளர்ந்து வந்தாள். இடையறாது சிவபெருமானை சிந்தித்து வந்தாள். கமலவல்லி சைவ நெறியில் வளர்ந்து வந்தாள். பழவினைத் தொடர்பால் சிவபூசனை செய்துவந்தாள். திருமண பருவத்தை அடைந்தாள்.

பெற்றோர் கோத்ரம் குலம் பார்த்து தக்கவன் என்று கருதிய ஒருவனுக்கு கமலவல்லியை மணம் செய்வித்தனர். அந்த ஊரிலேயே தனி மாடம் மருங்கமைத்து பெற்றோர் இல்லறத்தை நடத்தச் செய்தனர். கமலவல்லி காரைக்கால் அம்மையாரைப் போன்று இவ்விறைவனுக்கு இனியளாய் நடந்துவந்தாள். எனினும் உயிரிறைவனாகிய சிவபெருமானிடத்து பேரன்பு பூண்டு, தக்க அறங்களை செய்து வாழ்ந்துவந்தாள்.

சிவனை இடைவிடாது பூஜை செய்தாள். கணவன் கமலவல்லியின் உயர்வை உணராமல் அவள் சிவனை பூஜிப்பதில் வெறுப்புகொண்டு சிவலிங்கத்தை ஒரு கிணற்றில் எறிந்துவிட்டான். கமலவல்லி இதை உணர்ந்து, இல் இறைவனுக்கு மாறாக சிவனை பூஜிப்பதா அல்லது சிவபூஜையை விடுவதா என சிந்தித்தாள்.

கணவன் அறியாதவாறு சிவபூஜை செய்வது என்ற முடிவிற்கு வந்தாள். தன் வீட்டு பசுங்கன்று கட்டும் தறி ஒன்றை சிவலிங்கமாக பாவித்து பூஜை செய்துவந்தாள்.

இப்படி இவள் தன் கருத்துக்கு மாறாக நடக்கிறாள் என்பதை அறிந்த கணவன் சினம்கொண்டு, அக் கன்று கட்டும் தறியை கோடறி கொண்டு தாக்கினான். உதிரம் வெளிப்பட்டது. கமலவல்லியின் பக்தியை உலகவரும் அவள் கணவரும் அறிய இறைவன் அக் கட்டுத்தறியில் லிங்க வடிவம் கொண்டு காட்சியளித்தார்.

கமலவல்லியும், கணவனும் சிவலோகம் அடைந்தனர். கன்று கட்டும் தறி லிங்கமாக மாறியதால் இத் தலம் கன்றாப்பூர் என வழங்கப்பெற்றது. இந்த லிங்கத்திருமேனி சுயம்பு மூர்த்தியாகத் தோன்றினாலும் தறியிலிருந்து தோன்றியதால் இறைவன் நடுதறிநாதர் எனப் பட்டார்.

அந்த கன்றுக்குட்டியின் நடுதறி இருந்த இடமே இன்று நடுதறிநாதர் கோயிலாக விளங்குகின்றது. இன்றும் மூலவரது உச்சியில் கோடறி வெட்டு உள்ளதைக் காணலாம். இடும்பன் என்னும் அசுரன் இத்தலத்தில் நடுதறி நாதரை வழிபட்டு அருள்பெற்றான்.

கோவில் அமைப்பு:

கிழக்கு நோக்கிய இக்கோவில் மூன்று நிலைகளையுடைய சிறிய இராஜகோபுரத்துடன் காட்சி அளிக்கிறது. இவ்வாலயத்தில் கொடிமர மில்லை. பலிபீடம், நந்தி உயரமான பீடத்தில் உள்ளன.

உள் பிரகாரம் சுற்றி வரும்போது தீர்த்த கிணறு, விநாயகர், அடுத்துள்ள மண்டபத்தில் வரிசையாக சிவலிங்கம், விநாயக மூர்த்தங்கள் நான்கு, பிடாரியம்மன், சுப்பிரமணியர், சந்திரன், சூரியன், நவக்கிரகம், சனீஸ்வரன் சந்நிதிகள் உள்ளன. சனிபகவானை அடுத்து சம்பந்தர், அப்பர் இருவரும் காட்சி தருகின்றனர்.

பிரகாரம் வலம் முடித்து முன் மண்டபத்தை அடைந்தால் வலதுபுறம் நின்ற திருமேனியுடன் காட்சி தரும் அம்பாள் சந்நிதி உள்ளது. நேரே மூலவர் நடுத்தறியப்பர் தரிசனம் தருகிறார். மூலவர் சதுரபீடம் ஆவுடையார் மீது சுயம்புவாக எழுந்தருளியுள்ளார்.


சிவத்திரு.குமரேசன்

சிறப்புக்கள்: கண்நோய்நீங்கஞான குப தீர்த்தத்தில் நீராடியும்,குழந்தைப் பேறு,புகழ்பெற இங்குள்ள சிவகங்கை தீர்த்தத்தில் நீராடியும் பிரார்த்தனை செய்துகொள்கின்றனர்.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

அரிசியில் கல் இருப்பதுபோன்று உலகில் உண்மையும் பொய்யும் கலந்து காணப்படுகிறது. அரிசி, கல் இரண்டையும் அறிவுபூர்வமாக பிரித்து நன்மை போன்ற அரிசியை நம்மிடம் வைத்துக்கொண்டு, கல் போன்ற தீமைகளை உள்ளத்திலிருந்து வெளியே எறிந்து விடுவதைப்போல் நல்லவைகளை மட்டும் மனதில் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். உலகில் உண்மை பொய் இரண்டையும் பரம்பொருள் கலந்தே படைத்துள்ளார். உண்மை பொய் இரண்டையும் பிரித்து அறிவதற்கு அறிவு நமக்கு உள்ளது.

உலகில் ஆத்மா என்பது உண்மை அல்லது சத்தியம். ஆத்மாவுக்கு வெளியே இருப்பது நித்யா. இதனைப் புரிந்து கொள்வதுதான் தத்துவ விவேகம் எனப்படும். நித்யா என்பது உண்மை ஆனால் உண்மையில்லை. இதனை எப்படி நாம் உணர்ந்து கொள்வது என்றால் கானல்நீரைப் பார்ப்பது, வானில் சூரியன் மறைவது, கயிறு பாம்பாகத் தோன்றி மறைவது ஆகும். உலகில் கானல்நீர் என்பது உண்மை. பாலைவனத்தில் இதை உணரலாம். பாலைவனத்தில் நடந்து செல்லும்போது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தண்ணீர் இருப்பது போன்று தோன்றும், தண்ணீர் இருப்பதுபோல் தோன்றிய காட்சி உண்மையானது. அருகில் சென்று பார்த்தால் கானல்நீர் கண்ணுக்குத் தெரிவதில்லை. இதனைத்தான் நித்யா என்று ஆன்மிகம் கூறுகிறது

அதேபோல் சூரியன் காலையில் உதிக்கும்போது உலகின் ஒருபகுதி மட்டும் வெளிச்சம் இருக்கிறது. அதே சூரியன் மாலையில் மறைந்து விடுகிறது. உலகத்தின் ஒரு பகுதி அப்போது இருளில் மூழ்கி விடுகிறது. சூரியன் மறைந்தாலும் உலகில் மற்றொரு பகுதியில் வெளிச்சத்துடன் இருக்கிறது என்பதை அறிவியல்பூர்வமாக கேட்டு உணரமுடியும். எனவே சூரியன் தோன்றுவது உண்மை. அது மறைந்தாலும் உலகில் ஏதோ மூலையில் இருப்பது உண்மை எனவே இந்நிகழ்வை நித்தியா என்று ஆன்மிகம் கூறுகிறது.

கயிறு நம்மை அறியாமல் தூரத்தில் இருக்கும்போது பாம்பாக தோன்றுகிறது. நாம் அருகில் சென்று பார்த்தவுடன் அது கயிறு என்று உணர்ந்து தெளிவு கொள்கிறோம். உலகில் பாம்பு என்பது உண்மை. கயிறு என்பது உண்மை. நம் மனதில் பாம்பு என்று ஒன்று தோன்றும்போது மற்றொன்று கயிறு என்பது நம் மனதிலிருந்து மறைந்து விடுகிறது. மனதில் கயிறு என்று தோன்றும்போது பாம்பு என்பது மனதில் மறைந்து விடுகிறது. இதனைத்தான் ஆன்மிகம் நித்யா என்று கூறுகிறது.

உலகில் நாம் துன்பப்படும்போது நமது உள்ளமும் உடலும் வருந்துகிறது. ஆனால் ஆன்மீக வழியில் துன்பங்களைப்பற்றி அறிந்து கொண்டால், மனிதனுக்கு துன்பமும் இன்பமும் உலகில் நிரந்தரம் அல்ல. உலகில் நாம் இன்பங்களை அடைவது எப்படி நிரந்தரம் இல்லையோ அதேபோன்று துன்பமும் நாம் துன்பப்படுவதுவும் நிரந்தரம் அல்ல என்பதை மனிதன் ஆன்மிகம் மூலம் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு மனிதன் அறிந்து உணரும்போது துன்பங்களிலிருந்து அவன் விடுதலை பெறுகிறான். நாம் மனதளவில் துன்பப்படுவதில்லை. அதனால் அவன் மனம் எவ்விதத்திலும் பாதிப்பும் அடைவதில்லை. ஞானிகள் உடலளவில் துன்பப்படுவதுபோல் நமது கண்களுக்கு தோன்றும். ஆனால் அவர்கள் மனதளவில் எந்தநிலையிலும் துன்பப்படுவதில்லை.




www.aanmeegamalar.com

நாமும் அவர்கள்போல் ஆன்மீக வழியில் தியானப்பயிற்சி ஜபம், தவம் போன்றவற்றில் ஈடுபட்டு உயர்ந்தநிலை பெறும்போது உடலளவில் துன்பப்பட்டாலும் மனதில் துன்பப்படுவதில்லை என்பதை நமது மனம் அமைதி அடைவதை ஆன்மீக வழியில் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

நாம் ஆன்மீகத்தில் உயர்நிலை அடைவதற்கு தகுந்த ஆன்மீக குருவை நாடவேண்டும். நாம் ஆன்மீகவழியில் முன்னேறுவதற்கு ஆன்மீக குரு கூறும் வழிமுறைகளை அலட்சியம் செய்யாமல், தவறாமல் அவற்றைக் கடைபிடிக்க வேண்டும். ஆன்மீக நூல்களை படிப்பதில் நாட்டம் ஏற்பட வேண்டும். ஆன்மீக நூல்களைப் படிப்பதில் உடல் சோர்வடையலாம். நமது உள்ளம் அதில் சோர்வோ சலிப்போ அடையக்கூடாது. ஆன்மீக நூல்களை ஆழ்ந்து படிப்பதால் உலக சிந்தனைகளை ஓரளவு மறந்து, உயர்ந்த ஆன்மீக சிந்தனைகளில் நமது மனம் சுற்றிக்கொண்டே இருப்பதை உணரலாம்.

இராமாயணம் மற்றும் மகாபாரதம் இதிகாசக்கதைகள் பற்றி அனைவருக்கும் நுட்பமாகத் தெரியாவிட்டாலும் ஓரளவு தெரிந்திருப்போம். பெரும்பாலும் அதன் அடிப்படையான கதைகள் தெரிந்திருக்கும். இந்த இதிகாசக் கதைகளை தெரிந்திருந்தாலும் அதனை மீண்டும் மீண்டும் படிக்கத் தோன்றுகிறது. இந்த இதிகாசக் கதைகளை மீண்டும் மீண்டும் கேட்கத் தோன்றுகிறது. அதில் காணப்படும் வாழ்க்கைத் தத்துவங்கள்தான் இதற்குக் காரணம் ஆகும். பெண்ணாசை ஒரு மனிதனை அழித்து விடும் என்பதை இராமாயணம் காட்டும் நீதியாகும். இராவணன் இசையில் வல்லவன் பக்தி செய்வதில் சிறந்தவனாக இருந்தாலும் அவனது பெண்ணாசை என்னும் குணமே அவனது அழிவுக்குக் காரணமாக அமைந்து விட்டது.

மகாபாரதம் மண்ணாசை உள்ளவன் முடிவில் அழிந்து விடுவான் என்பதற்கு அதில் வரும் துரியோதனன் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறான். அவன் கொண்ட மண்ணாசையினால், தம்பிகளுக்கு உரிய சொத்துக்களை அபகரித்ததினால் அவன் அழிய நேரிட்டது. அவன் தம்பிகளான பஞ்சபாண்டவர்வர்களுக்கு ஊசிமுனை அளவுகூட இடம் தரமாட்டேன் என்று மண்ணின் மீது அவன் கொண்ட ஆசையினால் அவன் அழிந்து விடுகிறான் என்று மகாபாரதம் உணர்த்தும் தத்துவம் ஆகும். இருபெரும் தத்துவங்களைக் கூறுவதால் இராமாயாணம் மகாபாரதம் இதிகாசங்கள் என்று அழைக்கப்பட்டு இன்றும் விரும்பி மக்களால் படிக்கப்பட்டு வருகிறது.

நமக்கு சொத்துக்கள் குறித்து சண்டைசச்சரவுகள் ஏற்பட்டு மனதுக்குள் துன்பங்கள் சூழும்போது மகாபாரதம் கூறும் தத்துவங்களைப் பற்றி பொறுமையாகப் படித்தாலே அவன் திருந்தி விடுவான். அதேபோல் பிறர் மனை நோக்குபவன் இராமாயணம் படித்தால் கேட்டால் அவன் பெண்ணாசை என்பதை மனதில்கூட நினைக்க மாட்டான். ஆன்மீக நூல்கள் படித்து அதில் கூறியுள்ள அறிவுரைகளை ஆழ்ந்து



சிந்தித்துப் பார்த்தால், அவன் ஆன்மீகத்தில் முன்னேற்றம் காணலாம். அவனுக்கு ஆன்மீகத் தெளிவு கிடைக்கும் ஆன்மீகத் தெளிவு கிடைத்தாலே அவனுக்கு மன அமைதி தானாக வந்து விடும்.

கர்வம் என்பது ஒரு மனிதனுக்கு இருக்கக்கூடாது. கர்வம் நம்மை விட்டுப் எளிதில் போவதில்லை. மனிதனுக்கு மனபக்குவம் இல்லாததே இதற்கு முக்கியக் காரணம் ஆகும். கர்வம் என்றால் என்ன? என்னை அவன் மதிக்கவில்லை வணங்கவில்லை என்பதும் ஒருவிதத்தில் கர்வம்தான். தான் மற்றவர்களை விட மிகவும் அழகாக இருக்கிறேன் என்று அழகில் கர்வம் கொள்வது. அப்படிப்பட்டவர்கள் ரோஜா மலரை பற்றி நினைத்துப் பாருங்கள்.

ரோஜாமலர் செடியில் இருக்கும் வரைதான் அழகாக இருக்கும். செடியிலிருந்து ரோஜா மலர் உதிர்ந்து விட்டால் அதன் அழகு இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறது. அதுபோல்தான் நம்மிடம் இருக்கும் அழகும் இளமை கடந்து முதுமை அடையும்போது உன்னோட அழகும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய்விடும். இதனை உணர்ந்துகொள்ளும்போது நாம் அழகைப் பற்றிய வீண்கர்வம் கொள்ள மாட்டோம்.

நான் அதிகம் படித்துள்ளேன் என்று கல்வியில் கர்வத்துடன் இருப்பது கூடாது. கல்வியில் கர்வப்பட்டவர்கள், தன்னைவிட உயர்ந்த கல்வியில் சிறப்புற்றவர்களை கண்டவுடன் அவர்களது கர்வம் அவர்களையும் அறியாமல் தலை குனிந்து விடும். எனவே 'கற்றது கடுகளவு கல்லாதது உலகளவு' என்பதை கல்வியில் கர்வப்படும்போதெல்லாம் நினைத்துப் பாருங்கள். நாம் உயர்கல்வி படித்ததில் கர்வம் கொள்வதற்கு மாட்டோம். நற்குணத்தில் கர்வம், கல்வியில் கர்வம், சந்நியாசியின் கர்வம் இவையெல்லாம் எளிதில் போகாது. இவற்றிலெல்லாம் கர்வப்படாமல் இருக்க வேண்டுமெனில் ஆன்மீக வழியில்தான் அவற்றினை நீக்குவதற்கு முடியும்.

எந்த விதத்திலும் மனிதன் கர்வத்துடன் இருக்கக் கூடாது. கர்வத்துடன் இருப்பவனிடம் அமைதி என்பது இருக்காது. இரவும் பகலும் அவன் நம்மை மதிக்கவில்லை வணங்கவில்லை



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

என்று நினைத்து மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பது அவன் தனது மன அமைதியை அவனையும் அறியாமல் இழந்து கொண்டே இருப்பான். கர்வத்துடன் இருப்பது மன அமைதியை அவனையும் அறியாமல் இழந்து கொண்டிருக்கிறான் என்பதை அவன் உணர்ந்து கொள்ளவேண்டும். இதிலிருந்து மனிதனுடைய மன அமைதி கெடுவதற்கு அவனது கர்வமும் ஒரு காரணம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆன்மீகத்தில் தீவிர வைராக்கியம் உள்ளவன் அமைதியைத் தவிர உலகில் உள்ள இன்பங்கள் எதையும் விரும்ப மாட்டான். அவன் அமைதிக்கான வழிமுறைகளை ஆன்மீக வழியில் தேடிக்கொண்டே இருப்பான். ஆசை என்பது ஒரு நுண் விதை போன்றது. சிறு விதையில் இருந்து ஆலமரம் வருகிறது. அதே போன்று உள்ளத்தில் ஆசை என்ற சிறுவிதை களை ஊன்றினால், கவலைகள் என்ற ஆலமரம் மனதில் உருவாகி விடும். ஆசைகள் அதிகம் இருந்தால் அவன் அறியாமலே கவலைகள் வந்து சூழ்ந்து அமைதியை இழக்க நேரிடும்.

உலக இன்பங்கள் நிரந்தரம் இல்லை என்று சிலர் அறிந்து கொண்டாலும் அதனை விடுவதில்லை. அவர்கள் நிலையானது என்று நினைக்கும் இன்பங்கள் எல்லாம் உலகியல் நிலையில், எலியைப் பிடித்த பாம்பின் நிலைதான். அதை விழுங்கவும் முடிவதில்லை விடவும் முடிவதில்லை. உலக ஆசைகள் நம்மிடம் அகலும் வரை மன அமைதியை நம்மால் அடையமுடியாது என்பதை உணர்ந்து நமது ஆசைகளுக்கு அணை கட்ட வேண்டும். நமது மனம் ஆன்மீக வழியில் சென்றால் அது நமக்கு புதிய எண்ணங்களை அது உருவாக்கிக் கொடுக்கும். மேலும் அது நமது மனம் அமைதி பெறுவதற்கான வழிமுறைகளை தெரிவிக்கும். நமக்கு புரியாது குழப்பமாக இருந்தவற்றை தெளிவாக விஷயங்களைப் நமக்கு புரிந்து கொள்வதற்கு வைத்து விடும். பல புதிய உத்திகளை உணர்வுகளின் மூலம் உருவாக்கி மனதில் அமைதியைக் கொடுத்து விடும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவிக்கரம்



# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)